Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-27 09-04-2005 சனிக்கிழமை ஓசை 50



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

T.P:0712-610008

(சி-11479)

## தேசியத்தலைவர், தமிழீழ மக்கள் சார்பில் பாப்பரசருக்கு வத்திக்கானில் அஞ்சலி

### தமிழர்தாயகப் பகுதிகளில் துக்கம் அனுஷ்டிப்பு



அருட்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அவர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் சார்பாகவும், அனைத்து தமிழீழ மக்கள் சார்பாகவும் வத்திக்கானில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

நேரடியாக வத்திகான் திருக்கோவிலிற்குச் சென்ற இத்தாலிய தமிழ் அரசியல் பிரிவினர் பொறுப்பாளர் ஊடாக மலர்வளையம் வைத்து ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்திருந்தனர். இதேவேளை பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் மறைவை யொட்டி நேற்றைய தினம் தமிழீழம் எங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

பல்வேறு பொது அமைப்புக்கள் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இத்துக்கதின அனுஷ்டிப்புக்களின் போது வீடுகள், வீதிகள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள், வாகனங்களில் கறுப்புக் கொடி கட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப் பட்டதுடன், தேவாலயங்களில் விசேட வழிபாடுகளும் இடம் பெற்றன. (31,41)

# மனிதாபிமானப் பணிகள் புரிவதில்கூட அரசாங்கம் புறக்கணிப்புச் செய்கிறது!

## நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சுத் தரப்பிற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விபரிப்பு

**தமிழர் தாயகப் பகுதியில் மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சிறிலங்கா அரசு புறக்கணித்து வருவது தொடர்பாக தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நெதர்லாந்து வெளியுறவு அமைச்சுத் தரப்பினருக்கு விளக்கிக் கூறினார்.**

நெதர்லாந்து அரசின் வெளியுறவு அமைச்சுத் துணை நிர்வாக இயக்குநர் ஹெர்மன் ஏ.ஸ்காப்பர் தலைமையிலான குழுவினரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் நேற்று முன்தினம் சந்தித் துப் பேசினர். ஆழிப்பேரலையால் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கான தனது இரங்கலை சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரிடம் ஸ்காப்பர் பகிர்ந்து கொண்டார். ஆழிப்பேர லைக்கான கட்டமைப்புத் தொடர் (12ஆம் பக்கம் பார்க்க)

## சீனப்பிரதமர் கொழும்பு வருகை

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் அழைப்பிற்கிணங்க சீனப பிரதமர் வென்ஜியாபோ உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுக் கொழும்பு வந்தடைந்தார்.

சீனப்பிரதமரின் வருகை இருநாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் வலுவடையச் செய்யும் என்று சிறிலங்கா சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார்.சீனப்பிரதமர் சனா (12ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ராசிக்குழு உறுப்பினர் காத்தான்குடியில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் பேருந்தில் பயணம் செய்த முன்னாள் ராசிக் குழு உறுப்பினர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப் பட்டார். சேத்துக்குடா வாசியான எட்மன்ட் பாக்கியராசா என்பவரே கொல்லப்பட்டவர்என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் ஈ.பி.டி.பி அமைப்பிலிருந்து விலகி ராசிக் குழுவுடன் இணைந்து செயற்பட்டவர் என்றும், பின்னர் அதிலிருந்தும் விலகியவர் என்றும், விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக காத்தான்குடிப்பொலிசார் தெரிவித்தனர்.

## திருமலையில் புலிகளின் சோதனைச்சாவடி மீது இராணுவச் சீருடை அணிந்தோர் தாக்குதல்!

### உதவியாளர் ஒருவர் பலி;துணைப்படைவீரர் காயம்

(திருமலை)

திருகோணமலை பூநகர் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடி மீது நேற்று அதிகாலை நான்கு மணிக்கு இராணுவச் சீருடை அணிந்தோரால் நடத்தப்பட்ட தாக்குதலில் உதவியாளராகக் கடமையாற்றிய பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார். துணைப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

திருகோணமலையின் தென்பகுதியிலுள்ள மகிந்தபுர சிறிலங்கா இராணுவ முகாமுக்கு சுமார் 600 மீற்றர் கிழக்காக பூநகர் பகுதியில் விடுதலைப்புலிகளின் சோதனை நிலையம் அமைந்துள்ளது. இதன் மீது சிறிலங்கா இராணுவச் சீருடை அணிந்த ஒன்பது பேர் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் சோதனை நிலையத்தில் கடமையிலிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் அமைதியைச் சீர்குலைக்க இராணுவம் திட்டமிட்டுச் செயற்படுகிறது

### -மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் விசனம்

"திருகோணமலையில் அமைதியை சீர் குலைக்க சிறிலங்கா இராணுவம் திட்டமிட்டுச் செயற்படுகின்றது. இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இதனை நாம் கண்காணிப்புக் குழுவினரிடமும் தெரியப் படுத்தியுள்ளோம்' இவ்வாறு திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

திருகோணமலை பூநகர் விடுதலைப்புலிகளின் சோதனை அரண் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையிலேயே இத னைக் கூறினார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில், கடந்த புதனன்று மகிந்தபுர இராணுவ முகா மில் சிறிலங்காப் படையினருடன் ஆயுதக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குற்றங்களுக்காகக் கைதாகும் 70 வீதத்தினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது

### சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் ஆதங்கம்

(கொழும்பு)

நாட்டில் குற்றச் செயல்களுக்காகக் கைது செய்யப்படும் சந்தேக நபர்களில் எழுபது வீதமானவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் அவர்களை விடுதலை செய்ய வேண்டிய நிலை ஏற்படுவதாக சிறிலங்காப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெனாண்டோ கூறியுள்ளார்.கைதுசெய்யப்படுபவர்களுக்கு எதிராகப் போதிய சாட்சியங்கள் கிடைக்காமையே இதற்குக் காரணம் (12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் மீது கைக்குண்டு வீசிய வரதர் அணி உறுப்பினர் காயம்!

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா நாகர்இலுப்பைக் குளம் பகுதியில் நேற்று ஈ.பி.ஆர். எல்.எவ். வரதர் அணி உறுப்பினர் பொதுமக்கள் மீது கைக்குண்டை வீசித் தாக்க முற்பட்டவேளை, அது வெடித்ததில் குறித்த நபர் காயமடைந்தார். இதனையடுத்து அவ்விடத்துக்கு வெள்ளை வானில் விரைந்து வந்தோர் அவரை மீட்டுச் சென்றனர்.

இச்சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது, நாகர் இலுப்பைக் குளம் பகுதியில் வசித்து வந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## தவறவிடப்பட்டுள்ளது

செல்லையா சதீஸ்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (821110076V)பயண அனுமதி அட்டை A.T.M காட் உள்ளடங்கலான பேஸ் ஒன்றும் இரணைமடுச் சந்திக் கும் வெண்புறா நிறுவனத் திற்கும் இடைப்பட்ட இடத்திற்குள் தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர் கள் தயவுசெய்து ஈழநாதம் பணி மனையிலோ அல்லது புலிகளின் குரல் நிறுவனத்திலோ ஒப் படைத்து உதவுமாறு மிகவும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். (5910)

## தவறவிடப்பட்டுள்ளது

தயாபரன் கலைவாணி உடுத்துறை வடக்கு தாளையடி ஆகிய எனது 11/4 பவுண் நிறையுடைய தங்க கைச் சங்கிலி 7.4.2005 கரடிப்போக்கு சந் திக்கும் கிளிநொச்சி சந்தைக்குமிடை யில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச் சியில் ஒப்படைக்கவும் தகவல:- த.கலைவாணி. (5978)

## 2007.A/L வகுப்பு ஆரம்பம்

2007A/L மாணவர்களுக்கான கலை, வர்த்தக,கணித,விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம்.முன்னணி ஆசிரி யர் குழாம். இடம்:-கேம்பிறிஜ் கல் லூரி, உதயநகர்மேற்கு, கிளிநொச்சி. காலம்- 09.04.2005 (சனி, காலை), (நிர்வாகம்). (5972)

## மணமகன் தேவை

யாழ்.இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 1973 இல்பிறந்த 8 செவ்வாய் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுதி தராதரம் பெரிதாக எதிர்பார்க் கப்படமாட்டாது. ஏனையயாவும் நேரில பேசித் தீமானிக்கலாம். தொடர் புகளுக்கு:- 0112458073, 2227917 (5373)

## வீடு விற்பனைக்கு

பரந்தன் முல்லை வீதியில் புதுக் குடியிருப்பில் இருந்து 6 கிலோ மீற் றர் தொலைவில் தேவிபுரம் சந்திக்கு அண்மையில் ஒரு ஏக்கர் காணியில் கட்டுக் கிணற்றுடன் கூடிய கல் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொல்ல பேசி இல:- 2227586 (5984)

## திருக்குறள் நூல்வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

"மாணவர் வாழ்வில் திருக்குறள்" நூல் தொகுக்கப்பெற்று இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

மாணவர்களினதும், ஏனையோர் களினதும் வேண்டுகைக்கமைவாக இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளி வந்துள்ளது. (சோ)

# யாழ். வாசியிடம் கொழும்பில் கொள்ளை

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒரு வரிடமிருந்து கொழும்பு, கோட்டை, பிரிஸ்டல் வீதியிலுள்ள வை.எம்.சி. கட்டடத்திற்கு அருகாமையில் வைத்து கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் 20 இலட்சம் ரூபா பணம் இனந்தெரியாதோரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வீடொன்றை வாங்குவதற்காக இந்தப் பணத்துடன் இவர் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தி ருந்தபோது, ஆட்டோ ஒன்றில் வந்த இருவரே ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி பணத்தைப் பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக முறைப் பாடுகள் எதுவும் இதுவரை கிடைக் கவில்லையெனக் கூறிய கோட்டை பொலிசார். இதன் காரணமாக சம்ப வம் தொடர்பான தகவல்களை அறிய முடியாமல் இருப்பதாகவும், தொடர்ந் தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## பொதுக்கூட்டம

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் நடப்பு வருட பொதுக்கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் அதன் தலைவர் இ.கணேசபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பொதுக்கூட்டத்திற்கு பேர வையின் பொதுச்சபை உறுப்பினர் களை தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் பேரவை செயலர் தி.அப ராஜிதன் வேண்டியுள்ளார். (சோ)

# திருமணவாழ்வில் 30 வருடங்கள்



திரு.திருமதி. கிருபாநந் தராஜா மனோறஞ்சினி தம்பதிகள் இல்லற வாழ் வில் 30 வருடம் பூர்த்தியை 09.04.2005 அன்று நிறை வெய்துகின்றனர். இந் நாளில் எமது இல்ல இயக்குநர் சேவை ஆல மரம் போல் படர்ந்து கிளை பரப்ப விடுதிச் சிறார்களின் இதயங்களை மாலை யாக்கி அணிந்து பல் ஆண்டு காலம் வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின் றோம்.

**கிருபாநந்தராஜா மனோறஞ்சினி தம்பதிகள்**

இல்லக்காப்பாளர்,
பிள்ளைகள்,
நவஜீவனம் ஆண்கள் இல்லம்.

(5979)


# சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபத்தில்

புத்தாண்டை முன்னிட்டு புத்தாண்டு சிறப்புப்பரிசில்களுடன்

**அதிரடி விலைக்குறைப்பு**




புதுவருடத்தினை முன்னிட்டு TVS, உமாசாகி ஜெஸ்ரின், DVS, NL90, டைடோ மோட்டார் சைக்கிள்கள் சிறப்பு விலையாக விலைக்குறைப்புடன் விற்பனை செய்யப்படும்.

TVS GLX 118000/= தொடக்கம் விற்பனைக்குண்டு.

தலைக்கவசம், மழைக்கவசம், GLX, GX, சென்ரா மோட்டார் சைக்கிள்களுக்கு ஐந்து இலவச பராமரிப்பு சேவை.

புதுவருட பரிசில்களும் வழங்கப்படும்.

**சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்**

நாயகி கட்டடம், பரந்தன், கிளிநொச்சி.

தொ.பே:021-228 5072

(சி-11486)


# 45 ஆம் நாள் நினைவு

தாயின் மடியில் 22. 11. 1929




தாயக மண்ணில் 23. 02. 2005

## நாட்டுப்பற்றாளர்
## வே.க. ஏரம்பு

எண்ணிலா வரம் பெற்றென்ன,
ஏற்றங்கண்டுயர்ந்து மென்ன
எங்களின் 'அப்பா' உம்மை
இழந்திடர் அடைந்துற்றோமே
கண் முன்னே உங்கள் தோற்றம்
கனவிலும் உங்கள் தோற்றம்
எங்களை விட்டு நீங்கள்
சென்றதால் தோற்றோம், தோற்றோம்
நன்னெறி நமக்கென்றன்றி,
நாட்டுக்கும் நாட்டிச்சென்றீர்
அந்நெறிச் சிறப்பைத் தாங்கி
உம் நினைவோடு நாளும்
"உண்மையாய்" வாழ்வோம், வாழ்வோம்.

# 17 ஆம் ஆண்டு நினைவு

தாயின் மடியில் 18. 10. 1960



தாயக மண்ணில் 09. 04. 1988

## கப்டன் அருண்
## ஏரம்பு பாலச்சந்திரன்

பெற்றவள், உற்றவர், உடன் பிறந்தோர் எனப்
பற்றுணர் கொண்டுனைப் பாடுகையில்,
பெற்றவன் மட்டுமின்றில்லையே இம்முறை
வித்தெனச் சேர்ந்தனன் உம்முடனே
கொட்டுபோர் கொட்டிக் கொடும்பகை அழிந்திட
எத்தனை வீரர்கள் மாண்டிடினும்
எட்டுவோம் என்னும் பேருண்மையைத் தாங்கியே
எழுநடை போடும் இம்மண்ணினிலே
எத்தனை, எத்தனை ஆண்டுகள் ஆயினும்
எங்களின் 'அருண்' என்றும் எம்முடனே

(சி.11662)

தகவல்:-குடும்பத்தினர்

# இலட்சக் கணக்கானோர் கண்ணீர் சொரிய

# உலகிலிருந்து விடை பெற்றார் போப்பாண்டவர்

(வத்திக்கான்)

**உலக கத்தோலிக்கர்களுக்கு கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தலைமை தாங்கி நித்திய இளைப்பாற்றை அடைந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் பல இலட்சக் கணக்கானோர் கண்ணீர் சொரிய நேற்று உலகிலிருந்து விடை பெற்றார்.**

போப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போல் கடந்த சனிக்கிழமை இரவு 1.30 மணிக்கு மரணமடைந்தார்..

அவரது உடல் வத்திக்கான் நகரில் உள்ள புனித பீற்றர்ஸ் தேவாலயத்தில் பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்த வைக்கப்பட்டது. இலங்கை நேரப்படி திங்கட்கிழமை இரவு 9.30 மணியளவில் இருந்து மக்கள் அஞ்சலி செலுத்தத் தொடங்கினார்கள்.

பல லட்சக் கணக்கானவர்கள் தெருக்களில் படுத்துத் தூங்கி எழுந்து தங்கள் மத குருவுக்கு இறுதி அஞ்சலியை கண்ணீர்க் காணிக்கையாகச் செலுத்தினார்கள்.

போப்பாண்டவர் உடலை நல்லடக்கம் செய்ததற்கான பணிகள் நேற்று முன்னிரவு தொடங்கியது. முதல் கட்டமாக மக்கள் வரிசையில் நிற்பது நிறுத்தப்பட்டது. இதனால் போப் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்த லட்சக்கணக்கான மக்கள் ஏமாற்றம் அடைந்து கதறி அழுதனர்.


இத்தாலி நேரப்படி நேற்றுக் காலை 10.00 மணிக்கு போப்பாண்டவர் உடலை நல்லடக்கம் செய்யும் பணி தொடங்கியது. அவரது புனித உடல் வெண்பட்டுத்துணியால் மூடப்பட்டது. பிறகு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சவப் பெட்டிக்குள் வைக்கப்பட்டது.

அந்தப் பெட்டி மேலும் இரண்டு அடுக்கு சவப் பெட்டிக்குள் வைக்கப்பட்டது. அதனுள் போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போல் பற்றிய வாழ்க்கை குறிப்பு மற்றும் அவரது சேவைகள் பற்றிய தகவல் பெட்டகம் வைக்கப்பட்டது. பிறகு போப் பயன்படுத்திய பொருட்கள் வைக்கப்பட்டன.

இதனையடுத்து சவப்பெட்டிக்குள் நறுமணப் பொருட்கள் தூவப்பட்டன. அதன் பிறகு கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் உயர் மதக் குருமார்களான கர்தினால்கள் அஞ்சலி பாடல்களைப் பாடினார்கள். பிரார்த்தனையும் நடத்தப்பட்டது.

அதன் பிற்பாடு போப்பாண்டவரின் உடல் புனித பீற்றர்ஸ் பேராலயத்தின் தரைக்குக் கீழே அமைக்கப்பட்டுள்ள பாதாள அறையில் உள்ள கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அந்தக் கல்லறை புனித பீற்றரின் கல்லறைக்கு அடுத்த கல்லறை ஆகும். இது கிடைப்பதற்கு அரிய பேறாகக் கருதப் படுகின்றது. இவர் 148 ஆவது போப்பாண்டவராகும்.

போப்பாண்டவர் நல்லடக்கத்தை கர்தினால்களின் தலைவர் ஜோசப் ரட்ஜிங்கர் முன் நின்று நடத்தினார். சுமார் 3 மணி நேரம் நல்லடக்க நிகழ்ச்சி நடந்தது. இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளை வத்திக்கானில் உள்ள விசேட முகாம்களில் தங்கியுள்ள மக்கள் பார்ப்பதற்காக ஆங்காங்கே தொலைக் காட்சிகள் வைக்கப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்பட்டன.



போப் உடல் நல்லடக்க நிகழ்ச்சியில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ், ஐ.நா பொதுச் செயலாளர் கொபிஅனான், இங்கிலாந்துப் பிரதமர் டொனி பிளேயர், பிரான்ஸ் சனாதிபதி ஜேக்கஸ் சிரத், பிரேசில் சனாதிபதி லூயிஸ் இனாசியோ, இந்தியதுணை சனாதிபதி முகமது செகாவத், ஈரான் சனாதிபதி கதமி, பலஸ்தீன பிரதமர் அகமது, சிறிலக்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட 200இற்கும் மேற்பட்ட உலக அரசியல் மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.


வத்திக்கான் மீது விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரோம் நகர விமான நிலையம் தற்காலிகமாக நேற்று மூடப்பட்டது. போப்பாண்டவரின் விருப்பப்படி அவர் உடல் பாதாள அறையில் பூமியில் புதைக்கப்பட்டுள்ளது. அவர் கல்லறை மீது ஒரே ஒரு கல் பலகை மட்டும் வைக்கப்படும்.

அடுத்த புதிய போப்பாண்டவரைத் தேர்வு செய்ய 18ஆம் திகதி 117 கர்தினால்களும் வத்திக்கானில் கூடுகிறார்கள். எனவே இன்னும் பத்துத் தினங்களில் புதிய போப் யார் என்பது தெரிந்துவிடும்.









போப்பின் இறுதி நிகழ்வின் நிறைவிலிருந்து சில பதிவுகள்



போப்பாண்டவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்திருந்த உலகத் தலைவர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

## ஆப்கானிஸ்தானில் உலங்குவானூர்தி வீழ்ந்தது 18 அமெரிக்க இராணுவத்தினர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கஜினி மாநிலத்தில் அமெரிக்க இராணுவ உலங்குவானூர்தி விழுந்து நொருங்கியதில் 18 பேர் பலியானார்கள். அவர்களில் 13 பேர் இராணுவ வீரர்கள் 5 பேர் இராணுவ சிப்பந்திகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்துத்திற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.

## அமெரிக்க அணு உலைக் கழிவுகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தத் திட்டம்

அமெரிக்காவிலுள்ள அணு உலைக் கூடங்களில் குவிந்து கிடக்கும் அணுக் கழிவுகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு இருப்பதாகவும், அதன் மூலம் கதிரியக்க ஆபத்தை ஏற்படுத்த இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் 103 அணு உலைக் கூடங்கள் உள்ளன. அவற்றில் 90 சதவீதம் தனியாருக்குச் சொந்தமானவை இந்த உலைக் கூடங்களில் அணுக்கழிவுகள் குவிக்கப்பட்டு சேமித்து வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றின் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம் கதிரியக்க ஆபத்தை ஏற்படுத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். அணு ஆயுதத் தாக்குதல் மூலம் பெரிய அளவில் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்த முடியும் என்று தீவிரவாதிகள் கருதுகிறார்கள். இந்தத் தகவலின் பேரில் அணு சக்தி கட்டுப்பாட்டு அமைப்பு உஷாராகி அப்படி ஒரு தாக்குதல் நடத்தவிடாமல் எப்படித் தடுப்பது என்பது பற்றி ஆராய்ந்து வருகிறது. இந்த நிலையில் அணு உலைக் கூடங்களிலுள்ள கழிவுகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது அவ்வளவு எளிது அல்ல என்று அமெரிக்க அதிகாரிகளில் ஒரு தரப்பினர் கூறிவருகின்றனர்.

## தாய் நாட்டிலேயே இறுதிச் சடங்கு; போப்பின் உயிலில் திடுக்கிடும் தகவல்

(வத்திக்கான்)

தாய்நாட்டில் தன் இறுதிச் சடங்கு நடக்க வேண்டும் என்று போப்பாண்டவர் தன் உயிலில் எழுதியுள்ளார்.

மறைந்த போப்பாண்டவர் ஜோன் போல் எழுதிய உயில் நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக வெளியிடப்பட்டது. 20 ஆண்டுகளாக அந்த உயிலை எழுதியுள்ளார். அதன் முன் பகுதியில் தனது இறுதிச் சடங்கு தாய் நாடான போலந்தில் நடக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார். ஆனால் பின் பகுதியில் கர்த்தினால்கள் விரும்பிய இடத்தில் இறுதிச் சடங்கு நடத்தலாம் அது பற்றிப் போலந்து கர்த்தினால்கள் கருத்தைக் கேட்க வேண்டாம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

எனக்குச் சொத்து எதுவும் இல்லை. குடும்ப உறுப்பினர்கள் யாரும் கிடையாது. நான் பயன்படுத்தி வந்த பொருட்களை தகுதியானவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். கத்தோலிக்க மக்களைப் புதிய நூற்றாண்டில் வழி நடத்த விருப்பம். ஆனால் என் உடல் நலம் பாதித்து விட்டது. அதனால் நான் ராஜினாமா செய்ய விரும்பினேன்.ஆனால் அது மோசமான முன் மாதிரியாக இருக்கும் என்று ராஜினாமாவைக் கைவிட்டேன். கடந்த 700 ஆண்டுகளில் எந்தப் போப்பாண்டவரும் ராஜினாமா செய்ய வில்லை.

நான் எப்போதும் மரணத்தைத் தழுவுவதற்குத் தயாராக இருந்தேன். 1981ஆம் ஆண்டு துருக்கி நாட்டைச் சேர்ந்த துப்பாக்கி மனிதன் என்னைக் கொலை செய்ய முயற்சி செய்தான். அதன் பிறகு மரணம் எப்போதும் நிகழலாம் என்று மனதில் நினைத்து இருந்தேன். என்னைக் கடவுள் காப்பாற்றிவிட்டார். எனக்கு புத்துயிர் அளித்தார். மேலும் அணு ஆயுத போரில்



இருந்து உலக மக்களுக்கு விடுதலை அளித்த கடவுளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் போப்பாண்டவராக இருந்த காலத்தில் உதவியும், ஊக்கமும் அளித்த ரோமன் கத்தோலிக்க் ஆலயங்கள் மற்ற மதத்தலைவர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் அரசியல் தலைவர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடவுள் கையில் என் உயிர் இருக்கிறது. (இதைப் பலமுறை குறிப்பிட்டு இருக்கிறார்) இவ்வாறு தனது உயிலில் குறிப்பிட்டுள்ளார்.

## ஒரு நிமிடத்துக்கு ஒரு பெண் மரணம்

உலகம் முழுவதும் பேறு காலத்தில் ஒரு நிமிடத்துக்கு ஒரு பெண் உயிரிழப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பேறு காலப் பிரச்சினைகளால் ஐந்து லட்சத்து 29 ஆயிரம் பெண்களும், ஒரு கோடியே ஆறு லட்சம் குழந்தைகளும் இறக்கிறார்கள். எளிதில் தடுக்கக்கூடிய நோய்களுக்கு குழந்தைகள் பலியாகின்றன. 12 நாடுகளில் தான் இந்த சாவு எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. ஆபிரிக்க நாடுகளில் நிலைமை மோசமாகவுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 33 இலட்சம் குழந்தைகள் இறந்தே பிறக்கின்றன.

## 100 பெண்களைத் திருமணம் செய்ய சபதமிட்டு 91 பெண்களை மணந்தவர் மரணம்

100 பெண்களைத் திருமணம் செய்யச் சபதமிட்டு 91 பெண்களை மணந்த 84 வயதுக் கிழவர் மரணமடைந்தார்.

ஓரிசா மாநிலம் கியோஞ்சர் மாவட்டம் ஓரலி கிராமத்தைச் சேர்ந்தவர் உதயநாத் தகினாராய் ஜமீன்தார் பரம்பரையைச் சேர்ந்த இவர் கொல்கத்தாவில் படித்துக் கொண்டிருந்த போது முதல் திருமணம் நடந்தது. ஆனால் அந்தத் திருமணம் முறிந்து விட்டது. தகினாராயை விட்டு முதல் மனைவி பிரிந்தார். அப்போது தகினாராய் ஒரு சபதம் செய்தார். என் வாழ்நாளில் 100 பெண்களைத் திருமணம் செய்வேன் என்று உறுதி செய்தார்.

அதன் படியே ஒவ்வொரு பெண்ணாகத் திருமணம் செய்தார். எந்தப் பெண்ணையும் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்யவில்லை. அவர்களின் சம் மதத்துடனேயே மணந்தார். வெளிநாட்டுப் பெண்கள் கூட அவர்களைத் திருமணம் செய்து கொள்ள முன்வந்தனர். 91ஆவதாக ஹீரா என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இரண்டு மாதத்துக்கு முன்பு அவருக்கு ஒரு விபத்தினால் பக்கவாதம் ஏற்பட்டு நடக்க முடியாத நிலை படுத்த படுக்கையானார். தற்போது 84 வயது ஆகும். தகினாராய் நேற்று முன்தினம் தனது சொந்த ஊரில் மரணமடைந்தார்.

## இந்து மாமன்ற பரிசளிப்பு விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியற்கல்லூரியின் இந்து மாமன்றம் வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய சமய அறிவுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்புவிழா நிகழ்வு கடந்த ஆறாம் திகதி கல்லூரியின் பல நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்துமாமன்ற போசகர் பவானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மங்கல விளக்கினை பீடாதிபதி க.பேர்னாட், உபபீடாதிபதிகளான த.இன்பதேவராஜ், கு.சிதம்பரநாதன், சிரேஷ்ட விரிவுரையாளர் த.ரவீந்திரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

மாணவர்களிடையே மேற்பிரிவு, இடைநிலைப்பிரிவு, கனிஷ்டபிரிவு என நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (10)

# இராமநாதபுரம் பொதுச்சந்தையில் கட்டாக்காலி கால்நடைகள் தொல்லை

(வட்டக்கச்சி)

**இராமநாதபுரம் பொதுச்சந்தையில் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை அதிகரித்து வருவதாக மக் கள் தெரிவிக்கின்றனர்.**



தற்போது சந்தையடியிலுள்ள கால்நடைகளின் எச்சங்கள் சந்தையின் நடுப்பகுதியிலும் அதிக மாகக் காணப்படுகிறது. இச்சந்தை சரியான முறையில் சுத்தம் செய்ப்படுவதில்லை என்றும் வியாபாரிகளும், அப்பகுதி மக்களும் விசனம் தெரிவிக்கின்றனர். அத்தோடு அழுகிய மரக்கறிகளின் குப்பைகள் என்பனவும் அப்பகுதியில் போடப் பட்டுவருகின்றமையால் அவை மழைகாரணமாக துர்நாற்றம் வீசுகின்றன. சந்தையில் ஒரு பொதுக் கிணறோ, மலசல கூடவசதியோ எதுவும் இது வரைக்கும் செய்து தரப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. எனவே இப் பொதுச்சந்தையின் நிலையைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனத் தில் எடுத்து சீர் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (12)

## -வவுனியாவில்- பேரணி தொடர்பாக மக்கள் சந்திப்பு

(வவுனியா செய்தியாளர்)

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு அரசைக்கோரி வவுனியாவில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள பேரணி தொடர்பாக புதுக்குளம் பிரதேசத்தில் பல்வேறு மக்கள் சந்திப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

புதுக்குளம் பிரதேசத்திலுள்ள பல்வேறு பொது அமைப்புக்களையும், பொதுமக்களையும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தலைமையிலான குழுவினர் சந்தித்து வருகின்றனர். இச்சந்திப்பின் போது சமகால அரசியல் விடயங்கள் ,சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காது அரசு இழுத்தடிப்பதன் நோக்கம், சமாதானப் பேச்சுவார்த்தையைக் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் என்பன குறித்து விளக்கப்பட்டு வருகின்றது. (10)

## கிணற்றில் வீழ்ந்து இளைஞன் மரணம்

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் இளைஞர் ஒருவர் கிணற்றில் தவறுதலாக விழுந்து மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவமானது கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. மாயவனூரிலுள்ள தோட்டதிற்குக் கிருமிநாசினி தெளிக்கச்சென்ற வட்டக்கச்சி சில்வாவீதியைச்சேர்ந்த கிருஸ்ண மூர்த்தி குணசீலன் (வயது - 27) என்பவரே தோட்டக் கிணற்றினுள் தவறுதலாக விழுந்து இறந்துள்ளார். காலை 11.30 மணியளவில் விழுந்த இவரை அயலவர் அறிந்தும் உடனடியாக காப்பாற்ற முடியாது போயுள்ளது. பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட மரணவிசாரணையின் மூலம் விபத்து மரணம் என மரணவிசாரணை அதிகாரி திருலோகமூர்த்தி தெரிவித்துள்ளார். (கு,12)

## இலுப்பைக்கடவை அ.த.க.வில் அன்னை பூபதி நினைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் மடு, இலுப்பக்கடவை அ.த.க. பாடசாலையில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

காலை 9.00 மணிக்கு இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை ஆசிரியர் என். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், பொதுச்சுடரினை கள்ளியடிபாடசாலை அதிபர் பஞ்சலிங்கம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை இலுப்பைக் கடவைப் பிரதேச பொறுப்பாளர் கவிப்பிரியா ஏற்றிவைத்தார். திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை ஆத்திமோட்டைப் பாடசாலை அதிபர் கேதீஸ்வரன் ஏற்றிவைக்க திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை இலுப்பைக்கடவை பாடசாலை ஆசிரியர் சற்குணராசா அணிவித்தார்.

தொடர்ந்து அடையாள உண்ணா நோன்பு நிகழ்வு இடம்பெற்றது.நினைவுரைகளை ஆசிரியர்கள் பஞ்சலிங்கம், கிருபாகரன், இலுப்பைக் கடவைப் பிரதேசப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். கலை நிகழ்வுகளும், படக்காட்சியும் இடம்பெற்றது.

அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்ட உண்ணாவிரத நிகழ்வு பிற்பகல் 3.30 மணிக்கு நீராகாரம் வழங்கி நிறைவு செய்யப்பெற்றது. (சோ)

## குன்றும் குழியுமாக உள்ள வட்டக்கச்சி சந்தையடி வீதி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சந்தையடிப்பகுதி வீதியில் மழைநீர் தேங்கி நிற்பதனால் மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாகவுள்ளது.

பெய்துவரும் தொடர்மழை காரணமாக வட்டக்கச்சி பொதுச்சந்தைக்கு முன்பாக உள்ள மாவீரர் மண்டபத்திற்கு முன்னால் வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து இருப்பதும் அத்தோடு சந்தைக்கு வரும் மக்கள் அவ்வீதியால் வரும் போது ஒரு உந்துருளி வரும் போது ஏனையவாகனங்களோ, நடந்தோ பிரயாணம் செய்யமுடியாமல் நீர் அடித்துச் செல்கின்றது. இச்சம்பவம் இவ் இடத்தில் கடந்த ஆண்டில் இருந்து நடந்து வருகின்றது. எனவே மக்களின் போக்குவரத்திற்கு உதவி செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களோ அல்லது அதிகாரிகளோ கவனத்தில் எடுத்து இப்பகுதியைச் சீர்செய்து தருமாறு மக்கள் வேண்டியுள்ளனர். (12)

# யாழ்.மாவட்ட முன்னணி பாடசாலைகளின் க.பொ.த.சா.தர பரீட்சை சிறந்த பெறுபேறுகள்

### -ஏழு பாடசாலைகளில் 20 மாணவர் 10 பாடங்களிலும் ஏ தரச்சித்தி

(யாழ்ப்பாணம்)

இம்முறை வெளிவந்த கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகளில் யாழ்.இந்துக் கல்லூரி, வேம்படி உயர்தரப்பாடசாலை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, வடமராட்சி மத்தியகல்லூரி, வடமராட்சி இந்து மகளிர்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றில் இருபது மாணவர்கள் பத்துப்பாடங்களிலும் ஏ-தர சித்தியைப் பெற்று தத்தமது பாடசாலைகளை முன்னணியில் நிறுத்தியுள்ளனர்.

**யாழ்.இந்துக்கல்லூரி**

| | |
|---|---|
| த.அஜந்தன் | 10A |
| கு.அமரேஸ் | 10A |
| சா.நிசாந்தன் | 10A |
| ச.விதுஷன் | 10A |
| சி.தேயோமஜானந்தன் | 10A |
| சி.யோகானந்தன் | 10A |
| த.கோகுலன் | 9A,B |
| சு.தனுராஜ் | 9A,B |
| இ.தர்சன் | 9A,B |
| ஈ.துவாரகன் | 9A,B |
| க.முகிலன் | 9A,C |
| தி.பிரசாத் | 9A,B |
| கி.யாதவராயன் | 9A,C |
| தா.பாலரூபன் | 9A,C |
| ப.ஜனார்த்தனன் | 9A,C |
| அ.அலேக்சன் | 9A,C |
| சி.சுலக்ஷன் | 9A,C |
| ந. திவாகரன் | 9A,C |
| ந.பிரகாஷ் | 9A,S |
| இ.சுர்யுன் | 8A,B, C |
| ஜெ.யேசுதாஸ் | 8A,B, C |
| ப.கஜீபன் | 8A,B, C |
| மி.அல்பின்யுவராஜ் | 8A,2B |
| கி.கிருசன் | 8A,B, C |
| க.ஜெனகன் | 8A,B,S |
| த.ஜனந்தன் | 8A,B, C |
| து.ஜயந்தன் | 8A,B, C |
| ந.நவராஜகுமாரன் | 8A,2B |
| ப.அரிராம் | 8A,B,C |
| சி.அருணன் | 8A,B,C |
| இ.நிருசன் | 8A,B,C |
| க.நிசாந் | 8A,B,S |
| ம.பிருந்தாபன் | 8A,C,S |
| சே.செபிதன் | 8A,C,S |
| இ.சகிராஜ் | 8A,2C |
| பே.தினேஷ்வரன் | 8A,2C |
| கு.வஜிகுமார் | 8A,B,C |
| வ.யோகதீசன் | 8A,3C |
| சி.மதிசன் | 8A,B,S |
| ப.பிரதீப் | 8A,2B |
| ச.சஜீதரன் | 8A,C,S |
| யோ.கஜீந்தன் | 7A,B,2C |
| எஸ்.இளமாறன் | 7A,2B,C |
| தி.கிசோக்குமார் | 7A,B,2C |
| சி.கஜிந்திரன் | 7A,2B,C |
| பி.அஜந் | 7A,B,2C |
| பா.அரும்புஜன் | 7A,2B,C |
| சி.மோகனராஜ் | 7A,3C |
| ந.நவசாந்தன் | 7A,2B,C |
| கு.பிரஷாந் | 7A,2B,C |
| க.பிரணவரூபன் | 7A,2B,S |
| ஸ்ரீ.ஸ்ரீஜெயபவன் | 7A,3B |
| ம.அருள்இனியன் | 7A,2B,S |
| சி.பரதன் | 7A,2B,S |

**வேம்படி உயர்தரப் பாடசாலை**

| | |
|---|---|
| க.பூர்ணிமா | 10A |
| அ.தர்சிகா | 10A |
| கோ.கீருத்திகா | 10A |
| ச.சிவமங்கை | 10A |
| சு.சசிகலா | 10A |
| ஜெ.இ.மிருணாளினி | 9A,C |
| இ.கஜித்தா | 9A,B |
| கு.கோபிகா | 9A,B |
| நி.கஜனி | 9A,C |
| ஸ்ரீ.மாதுரி | 9A,B |
| யா.துஸ்யந்தி | 9A,C |
| ந.சாளினி | 9A,C |
| தி.சங்கீதா | 9A,C |
| லோ.சிந்துரேகா | 9A,C |
| அ.காயத்திரி | 9A,C |
| இ.யசோதா | 9A,B |
| தி.தர்மிகா | 8A,2C |
| ச.அபிராமி | 8A,B,C |
| இ.கௌசினி | 8A,B,C |
| யோ.நிரோசிகா | 8A,2B |
| தி.கல்யாணி | 8A,2C |
| யோ.காயத்திரி | 8A,2B |
| து.மஞ்சுளா | 8A,2B |
| வி.தட்சாயினி | 8A,B,C |
| கி.வனஜா | 8A,B,C |
| சி.மைதிலி | 7A,2B,C |
| அ.துஸ்யந்தி | 7A,2B,C |
| இ.பிருந்தா | 7A,2B,C |
| ச.ஜெனனி | 7A,2B,C |
| ச.லிங்காசினி | 7A,3B |
| மு.விஜித்தா | 7A,B,C,S |
| ஜெ.செந்தூரி | 7A,2B |
| கோ.சத்தியகலா | 7A,3B |
| த.சிவரூபினி | 7A,B,2C |
| சி.ஆரணி | 7A,2B,C |
| க.லக்ஷிதா | 7A,3B |
| து.மயூரதி | 7A,3B |
| பா.கௌந்திகா | 7A,3B |
| ஜெ.மேகலா | 7A,2B,C |
| ஜெ.வேகலா | 7A,3B |
| து.அபிராமி | 7A,B,2C |
| ம.ஜபிந்தா | 7A,2B,C |
| வ.கஜித்தா | 7A,3B |

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

| | |
|---|---|
| வி.ரஜீவன் | 9A,C |
| த.தயாபரன் | 9A,B |
| நி.வசீகரன் | 9A,B |
| அ.அமல்ஜெரோசன் | 9A,B |
| செ.வசீகரன் | 9A,B |
| ஸ்ரீ.நிமலன் | 8A,B,C |
| க.நிதர்சன் | 8A,2B |
| ஜெ.பூங்குன்றன் | 8A,2B |
| கு.ரகுராம் | 8A,2B |
| ர.ரஜீவன் | 8A,2B |
| பா.ஞானராஜ் | 8A,B,C |
| செ.பிரதீன் | 7A,3B |
| சி.பிரதீபன் | 7A,3B |
| க.ரஜீவன் | 7A,B,2C |
| சி.அச்சுதன் | 7A,B,C,S |
| சி.ராசபுத்திரன் | 7A,B,2C |
| தி.துவாரகன் | 7A,B,2C |
| வே.ஜோன்மேரி | 7A,2B,C |
| சி.நெடுமாறன் | 7A,2B,S |
| சி.அகிலன் | 7A,B,2C |
| ந.கார்த்திக் | 7A,B,2C |

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

| | |
|---|---|
| ச.சாரீயன் | 10A |
| கு.டில்சன் | 10A |
| ஸ்ரீ.ஜனார்த்தனன் | 9A,B |
| க.மாதவராஜன் | 9A,C |
| நி.ராஜ்குமார் | 9A,B |
| த.சஜீவன் | 9A,B |
| கு.சஞ்சிவா | 9A,S |
| ஜ.முத்துக்குமார் | 8A,2B |
| அ.மரினுசுகிர்திரன் | 8A,B,C |
| வ.சந்திரநாதன் | 7A,3B |
| அ.கரிஸ் | 7A,B,C,S |
| இ.கஜானன் | 7A,B,2C |
| வே.பிரணவன் | 7A,2B,C |
| ர.அனுசந்தன் | 7A,2B,C |

**சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

| | |
|---|---|
| அ.கார்த்திகா | 10A |
| சூ.தர்சிகா | 10A |
| க.காயத்திரி | 10A |
| நா.நிலாந்தினி | 10A |
| த.ஜலுகன் | 9A,B |
| ச.சுகன்ஜா | 9A,C |
| வி.தனுசியா | 9A,B |
| பொ.றினேரசா | 9A,C |
| இ.தீபனா | 9A,B |
| க.றெஜிலா | 9A,B |
| ந.சுகிதா | 8A,B,C |

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

| | |
|---|---|
| ப.பாமினி | 9A,B |
| தெ.கௌசிகா | 8A,2B |
| த.கீர்த்திகா | 8A,B,C |
| பூ.தர்சிகா | 8A,B,C |
| பூ.றோகினி | 7A,2B,C |
| சி.சிவரூபினி | 7A,2B,C |
| ஜெ.சஜந்தவி | 7A, B, 2C |
| சு.கஜானா | 7A, 2B ,S |

**வடமராட்சி மத்திய கல்லூரி**

| | |
|---|---|
| வி.நிசாந்தி | 10,A |
| வ.நிவேதிகா | 9A,B |
| த.நிசாந்தினி | 9A,B |
| க.கம்சிகா | 8A,2B |
| அ.ரேக்கா | 8A,B,C |
| து.தனுஜா | 8A,2B |
| சி.யுசித்தா | 8A,2B |
| த.மிதுலா | 7A,2B,C |
| ந.மேனகா | 7A,2B,C |

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

| | |
|---|---|
| தி.தாரணி | 10A |
| இ.சுஜிதா | 9A,B |
| வே.சுகன்னியா | 9A,C |
| ப.பாரதி | 9A,C |
| செ.செல்வரஜிதா | 8A,2B |
| த.வினோதினி | 8A,2B |
| ப.சுவேந்தினி | 8A,B,S |
| தா.மயூரி | 8A,B,C |
| ம.சோபனா | 7A,B,2C |

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

| | |
|---|---|
| சி.வதனி | 9A,B |
| சி.வலஜி | 8A,2B |
| ந.சிவாஸ்கர் | 8A,C,S |

**திருக்குடும்பம் கன்னியர் மடம**

| | |
|---|---|
| இ.வனுஜா | 8A,B,C |
| ஜே.நிறோஜா | 7A,B,2C |

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

| | |
|---|---|
| இ.சுபா | 9A,C |
| ஆ.சாமினி | 9A,S |
| கு.தர்சிகா | 8A |
| ஞா.துவாரகஅக்னேஸ் | 8A,B,C |

**யாழ்.மத்திய கல்லூரி**

| | |
|---|---|
| ச.தவக்குமரன் | 10A |
| க.விஜியராஜ் | 9A,B |
| பெ.ரவிக்குமார் | 7A,B,2S |
| ச.சொலமன் | 7A,2B,S |

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

| | |
|---|---|
| கு.குகனந் | 8A,2B |
| செ.கஜனீதன் | 7A,3B |

# அரியாலைக் குடாக்கடலில் மீன்பிடிக்க சிறிலங்காப்படையினர் கெடுபிடி!

(யாழ்ப்பாணம்)

**அரசு- விடுதலைப்புலிகளுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்து விட்டபோதும் அரியாலையை அண்டிய குடாக்கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்த படைத்தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றது**

அத்துடன் குறித்த கடல் எல்லையினைத் தாண்டி மீன்பிடிப்பதற்கான அனுமதியை மறுத்து வரும் படையினர், இரவில் தொழிலில ஈடுபடவும் கெடுபிடிகளை அமுல்படுத்தியுள்ளனர்.

இரண்டாயிரமாம் ஆண்டின் முற்பகுதியில் அரியாலை மற்றும் கொழும்புத்துறைப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளையடுத்து கரையோரப்பகுதிகள் முழுவதையும் படைத்தரப்பு தனது ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டு வந்திருந்தது இந்த நிலையில் மீன்பிடித்தொழிலையும் முற்றாகத் தடை செய்திருந்த படைத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான சமாதான காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீன்பிடியை அனுமதித்திருந்தது.

எனினும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருட காலத்தைக் கடந்துவிட்டபோதிலும் வெளியிணைப்பு இயந்திரங்களைப் படகுகளில் பொருத்தி மீன்பிடியில் ஈடுபட படைத்தரப்பு அனுமதி மறுத்து வருகின்றது. இது தொடர்பாக அப்பகுதி மீனவ சங்கங்கள் பல தடவைகள் படைத்தலைமைக்கு விண்ணப்பித்த போதிலும் உரிய பலனேதும் கிட்டவில்லையெனக் கூறப்படுகின்றது.

குறிப்பாகக் கைகளால் வலிக்கும் துடுப்புக்களையும் மற்றும் பாய் மரங்களையும் கொண்டே தாம் கடந்த நான்கு வருடங்களிற்கும் மேலாக மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகக் கூறும் அப்பகுதி மீனவர்கள் சமாதான காலத்தில் தமது வாழ்வில் எந்தவொருமகிழ்ச்சியையும்கொண்டு வர வில்லையெனவும் கூறுகின்றனர்.

அரியாலை மற்றும் கொழும்புத்துறைப் பகுதிகளில் பெருமளவு கரையோரப் பகுதிகளை ஆக்கிரமித்து வைத்திருக்கும் படைத்தரப்பு பாரிய முகாம்களையும் அப்பகுதியில் அமைத்துள்ளது.

இதனால் கடற்கரை வீதிக்கு அப்பாலுள்ள பகுதிகள் அனைத்தினையும் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ள படைத்தரப்பு கடற்கரைக்குச் செல்லும் பிரதான வீதிகளையும் தடைசெய்து வைத்துள்ளது. இத்துடன் வீதிகளுக்குக் குறுக்காக வீதித்தடைகளைப் போட்டும் காவலரண்களை அமைத்தும் வெளியார் உட்செல்ல அனுமதி மறுத்துவருகிறது.

எனினும் மீனவர்களிற்கு மட்டும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக "பாஸ்"களை படைத்தரப்பு வழங்கியுள்ளது. (27)

# பாலர் பராமரிப்புப்பள்ளிக்கு வசதிகள் செய்துதரக் கோரிக்கை

(தென்மராட்சி)

அல்லாரை அபிராமி பாலர் பகல் பராமரிப்புப் பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும் எனப் பள்ளி நிர்வாகத்தினர் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பள்ளியில் பயிலும் மாணவர் நலன் கருதி மலசல கூடவசதி, குடிநீர் வசதி, போசாக்கு உணவு வசதி, ஆசிரியர் சம்பளம், மின்சார வசதி என்பவற்றைச் செய்து தரும்படி பள்ளி நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

# மதுபானம் அருந்திவிட்டு வாகனம் செலுத்துவோர் கைது


(யாழ்ப்பாணம்)

யாழ்.குடநாட்டில் மதுபானம் அருந்திவிட்டு மோட்டார் வாகனங்களை செலுத்துவோரைக் கைதுசெய்து அவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுப்பதை பொலிசார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதனடிப்படையில் யாழ்.நகரையும் அதனை அண்டிய பகுதிகளிலும் சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளின்போது பலர் சிக்கியுள்ளனர்.

இவ்வாறு சிக்கியவர்களிடமிருந்து ஓட்டுநர் உரிமங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. (33)

# யாழ். பிரதேச அரசியல் துறையினரால் குற்றச்செயல்கள் கண்டுபிடிப்பு




(நமதுநிருபர்)

யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற களவுகள் அரசியல் துறையினரின் விசாரணைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு களவாடப்பட்ட பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன அத்துடன் குழு மோதல்களும் அரசியல் துறையினரின் தலையீட்டல் முடிவுக்கு வந்துள்ளன.

யாழ். முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி அ. ஜெயக்குமாரி என்பவரது வீட்டில் களவாடப்பட்ட தங்க ஆபரணங்களான அட்டியல் ஒன்று, தாலி ஒன்று,தாலிக் காசு இரண்டு, முத்துமாலை ஒன்று, மிஞ்சி ஒன்று என்பன யாழ்பிரதேச அரசியல் துறையினரால் கைப்பற்றப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அண்மையில் ஏ.வி. வீதியைச் சேர்ந்த அலெக்சாண்டர் என்பவரது ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டி யாழ்.நகரப்பகுயில் திருடப்பட்ட சமயம் யாழ். பிரதேச அரசியல் துறையினரால் கைப்பற்றப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குணசிங்கம் தயாளினி என்ற பெண்ணின் லுமாலா ரக மகளிர் துவிச்சக்கர வண்டி யாழ். நகரில் களவாடப்பட்ட சமயம் மக்களால் இனம் காணப்பட்டு யாழ். பிரதேச அரசியல் துறையினரிடம் முறையிட்டதை அடுத்து திருடன் கைது செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப் பட்டதுடன் துவிச்சக்கரவண்டியும் உரிமையாளரிடம் ஒப்படைக்கப் பட்டது.

யாழ். முத்திரைச்சந்திப்பகுதியில் தரிப்பிடத்திலுள்ள ஆட்டோ வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த பாடல் கருவிகள், களவாடப்பட்ட பொருள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டு பொருள் உரிமையாளரிடம் யாழ். பிரதேச பொறுப்பாளரால் கையளிக்கப்பட்டது.

ஆரியகுளம் அரசடிப்பகுதியில் இரு பகுதியினருக்கும் மத்தியில் நிலவிய குழு மோதலை யாழ். அரசியல் துறைப்பொறுப்பாளர். சி.செழியன் தீர்த்துவைத்துள்ளார் அத்தியடிப்பிள்ளையார் கோவிலில் இரு பிரிவினரையும் அழைத்து கலந்துரையாடல் மூலம் பிரச்சினைக்கு இனக்கப்பாடு காணப்பட்டது. (செ)

# "செவ்விளக்கு" அரங்கப் பயணம்


(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்தைச் சேர்ந்த நுண்கலைத் துறையினரின் வழிப்படுத்தலில் கடந்த மாசி மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீட வளாகத்தின் திறந்த வெளியில் ஆற்றுகை செய்யப்பட்ட செவ்விளக்கு நாடகமானது மக்களை ஒன்று திரட்டும் அ[illegible]காகத் தனது பயணத்தைத் தொடங்கியுள்ளது.

பிரதேசங்கள் தோறும் நிகழும் பயணத்தின் முதற்கட்டமாக நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும், மாலை 7.00 மணிக்கு ஆற்றுகை செய்யப்படவுள்ளது. சீன பீஜிங் ஒபேரா வடிவமான இந்நாடகமானது ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீன மக்களை அடக்கியாண்டபோது ஜப்பானியருக்கு எதிராக கிளர்ந்தெழும் சீன மக்களின் உணர்வை. தனித்துவமான இசையும் நடனமும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஒடுக்கப்படும் ஓர் இனம் கிளர்ந்தெழும்போதே புரட்சி வெடிக்கும், புதுநாடு பிறக்கும். அதற்காக சந்ததி சந்ததியாகப் போராடிப் போராடி முன் செல்வோம் என்பதையே சொல்லி விடுகின்றது. காலத்தின் பதிவாகக் காலத்தோடு வாழ்ந்து வருகின்ற ஒரு படைப்பே செவ்விளக்கு ஆகும்.

# கிணற்று நீர் மாசடைந்துள்ளதால் மயிலிட்டியில் இடம் பெயர்ந்தோர் பாதிப்பு!



(மல்லாகம்)

யாழ்வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள மல்லாகம் கண்ணகி அம்மன் அகதிமுகாம் மக்களுக்கென அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள பொதுக் கிணறுகளும், மலசலகூடங்களும் மிகவும் நெருக்கமாக இருப்பதனால் கிணற்று நீர் மாசுபடுவதாக அம்முகாமின் செயலாளர் இதயராஜா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இக் கண்ணகிஅம்மன் அகதிமுகாமில் வாழும் மக்களுக்கென தொண்டர் அமைப்புகளால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள பொது மலசல கூடங்களது கழிவுக்குழிகளும், பொதுக்குழாய்க் கிணறுகளும் மிக நெருக்கமாக உள்ளன. இந்நிலையில் யாழ்.குடாநாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக மலசலகூட கழிவுக்குழிகளிலிருந்து கசிவடையும் கழிவுப் பதார்த்தங்கள் கிணற்று நீருடன் கலந்து வருகிறது. இதனால் இக் குடிநீர்க்கிணறுகளிலிருந்து பெறும் நீரை அருந்துவோருக்கு அபாயகரமான தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அவர் மேலும்சுட்டிக் காட்டியுள்ளார். (33)

# உலருணவு விநியோகம் வழங்கப்படவில்லை; சுனாமியால் தொழில் இழந்த 500பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழ்ந்து வரும் நிலையில் சுனாமி அனர்த்தம் காரணமாக தொழில் மற்றும் உடமை இழப்புகளைச் சந்தித்த 111 குடும்பங் களைச் சேர்ந்த சுமார் 500 பேர் உலருணவு முத்திரை வழங்கப்படாததால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. மொத்தம் 215 குடும்பங்களில் 104 குடும்பங்களுக்கு மாத்திரமே சுனாமி அனர்த்த நிவாரண உலருணவு விநியோகத்திற்கான நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமக்கான உலருணவு முத்தி ரைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர் (33)

## சுயதொழில் முயற்சியாளருக்கு சுழற்சி முறைக்கடன் வழங்கல்

யாழ்.கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் நாற்பது சுயதொழில் முயற்சியாளர்களுக்கான சுழற்சிமுறைக் கடன்களை நிகொட் திட்டத்தின் உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கியுள்ளனர். மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த வறிய சுயதொழில் முயற்சியாளர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். (33)

# குடாநாட்டிலுள்ள ஆறு பிரதான வீதிகளை இருவழிப்பாதையாக மாற்றியமைக்க முடிவு

அண்மைக் காலமாக யாழ்குடாநாட்டினில் வாகன விபத்துக்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகின்ற நிலையில் குடா நர்ட்டிலுள்ள ஆறு பிரதான வீதிகளை இரு வழிப்பாதை களாக மாற்றியமைக்க முடிவு செய் யப்பட்டுள்ளது யாழ் செயலகத்தில் நேற்று முன் தினம் காலை இடம் பெற்ற விசேட கூட்டமொன்றிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். கண்டிவீதி, யாழ்- பருத்தித் துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன் துறை வீதி, யாழ்.மானிப்பாய் ஊடான காரைநகர் வீதி மற்றும் பண்ணையூடான யாழ் ஊர்காவல்றதுறை வீதி என்பவையே இருவழிப்பாதைகளாக மாற்றப்படவுள்ளன இத்திட்டம் எதிர்வரும் 2006 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத காலப்பகுதியினுள் முடிவுறுத்தப்பட வேண்டுமெனவும் யாழ் கண்டி வீதியை இருவழிப்பாதை யாக்க ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஏனைய வீதிகளை இருவழிப்பாதை யாக்க யப்பானிய அரசும் நிதி உதவிகளை வழங்க முன் வந்து இருப்பதாகவும் யாழ் அரசு அதிபர் கே.கணேஸ் ஊடகவியாலளர்களிடையே உரையாற்று கையில் தெரிவித்தார்.

யாழ் அரச அதிபரது அலுவலகத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமான இக் கூட்டம் சுமார் இரண்டு மணி நேரம் இடம் பெற்றது அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் விடுதலைப்புலிகளின் தமழீழ நிர்வாக சேவை பிரதிநிகள் ஆகியோருடன் மாநகர சபை ஆணையாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனா. (27)

## அடி அழுகல் நோய்

யாழ்.குடாநாட்டில் பயிரிடப் பட்டுள்ள புகையிலைப்பயிர் களுக்கு அடி அழுகல் நோய் அதிகம் பரவி வருவதால் புகையிலைப்பயிர்ச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக கமநலசேவைத் திணைக்களத்தின் பாடவிதான அதிகாரி நல்லதம்பி தெரிவித்தார். யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள திடீர் காலநிலையின் சீரற்றதன்மையாலேயே இந்நோய் பரவுவதாகவும் இந்நோய் பரம்பல் குறித்து விவசாயிகள் விழிப்புடன் செயற்பட்டு நட்டங்களைத் தவிர்க்கு மாறும் அவர் கோரியுள்ளார். (33)

# மாவில் தாக்கத்தை ஏற்படுத்தும் மாவிலைத்தத்தி

மாமரம்பூக்கும் காலங்களில் மாவிலைத் தத்திகள் பூந்துணர், இளம் தளிர்கள் ஆகியவற்றில் முட்டையிடும் பூச்சியின் அணங்குகள் தாவரச்சாற்றை உறுஞ்சிக் குடிக்கும். இத னால் பாதிக்கப்பட்ட இளம் தளிர், பூந்துணர் என்பன உலர்ந்து விடும். இதனால் உரு வாகும் காய்கள் மிகக் குறைவாகவே இருக்கும். பூச்சியினால் சுரக்கப்படும் தேன் கழிவில் கறுப்பு நிற மான பங்கசு (பூஞ்சனம்) வளரும். இதனால் இலை, பூந்துணர் என்பன கறுப்பு நிறமாக மாறும். இப் பூக்களில் இருந்து காய்கள் உருவாகாது. காய்களில் கறுப்பு நிறப்புள்ளிகள் காணப் படும்போது அறுவடையை முற்றாகப் பெற முடியாமற் போகலாம்.

## நிறையுடலிப் பருவம் [தாய்ப்பூச்சி]

மிகவும் சுறுசுறுப்பான பூச்சி 3-4 மில்லி மீற்றர் அளவுடையதாகும். கபிலநிறமானதாகக் காணப்படும். நிறையுடலியின் (தாய்ப்பூச்சி) நெற்றி இளம் மஞ்சள் நிறமாக இருப்பதோடு. நெஞ்சுப் பகுதியில் மூன்று புள்ளிகளையும் காணலாம். வருடம் முழுவதும் மரத் தண்டிலும், கிளைகளிலும் காணப் படும். இப் பூச்சி உலர் காலத்திலேயே அதிகளவில் பெருகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மரத்தின் அருகே செல்லும்போது இவை பறக்கும் ஓசையைக் கேட்கமுடியும்.

## முட்டை

பூந்துணர்கள், பூ அரும்புகள், காம்பு, இளம் இலைகளின் நரம்புகள் என்பவற்றின் கலன்களில் முட்டையிடும், பெண் பூச்சியொன்று 200 வரையான முட்டைகளை இடும். இம் முட்டைகள் 4-5 நாட்களில் பொரிக்கும்.

## அணங்குப்பருவம் [குஞ்சுகள்]

இது தோற்றத்தில் நிறையுடலியை (தாய்ப்பூச்சி) ஒத்திருந்தாலும் அளவில் சிறியதாகவும், நிறம் மாற்றமடைந்தும் இருக்கும். 4-5 நாட்கள் அணங்குப் பருவத்தைக் கடந்து நிறையுடலியாக (தாய்ப்பூச்சி) மாறும். இதற்கு 10-14 நாட்கள் செல்லும்.

## கட்டுப்படுத்தல்


01.மரத்தில் காணப்படும் மேலதிகக் கிளைகளை வெட்டி அகற்றவும். இதனால் மரத்திற்குப் போதியளவு சூரிய ஒளி கிடைப்பதால் பூச்சிகள் பெருகுவது தடைப்படும்.

02. புதிதாகத் தளிர்கள் உருவாகும் போதும், பூந்துணர்கள் மலரும் போதும் பின் வரும் பூச்சி நாசினிகளில் ஏதாவது ஒன்றை சிபார்சின் படி விசிறவும்.

**டைமீதோயேற்-** 30 மில்லி லீற்றரை 10 லீற்றர் நீருடன் கலக்கவும்.

**இமிடக்குளோபிறிட்-** 10 மில்லி லீற்றரை 10 லீற்றர் நீருடன் கலக்கவும்.

## மாவிலைத்தத்தியின் வகைகள்




07-இடியொஸ்கோபஸ் நிவ்யொங்பரெஸ் (3-4 மில்லிமீற்றர் நீளம்)

08-அம்ரிடோடஸ் பிரேவிஸ்ட யிலஸ் (4-5 மில்லிமீற்றர் நீளம்)

09-இடியொஸ் போபஸ் கிளிபியாவிஸ் (3-3.8 மில்லிமீற்றர் நீளம்)

# பீடை நாசினியாக வேப்பம் விதைச்சாறு

கத்தரியில் வெண் ஈ, தண்டு, காய்த்துளைப்பானின் தாக்கம் "மே" மாத பிற்பகுதியிலிருந்து "ஜூலை" மாத முற்பகுதி வரை அதிகளவு காணப்படும். இதனை இரசாயனங்களை விசிறி கட்டுப் படுத்த முற்பட்டபோது விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர் நோக்கினர். ஆனால் வேப்பம் விதைச்சாறு இப்பீடைகளை இலகுவாக கட்டுப்படுத்துகின்றது. அத்துடன் இது சூழலையும் மாசு படுத்துவதில்லை.

## கலவை முறை

* 5 கிலோ தோல் அகற்றிய புதியவேப்பம் விதையை நன்கு இடித்து 5 லீற்றர் நீரில் 24 மணித்தியாலம் வரை ஊறவிடப்படுகின்றது.

* இதன் பின் இக்கலவை வடித்தெடுக்கப்படுகின்றது.

* வடித்தபின் 4-4 1/2 லீற்றர் விதைச்சாற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

* வடித்தெடுத்த கரைசல் (4-4 1/2) 20-25 லீற்றர் நீருடன் கலக்கப் படுகின்றது.

இக்கரைசல் 1/4 ஏக்கர் பரப்பிற்குப் போதுமானதாகும். பீடையின் தாக்க அறிகுறி ஆரம்பிக்கும் போதே இச்சாற்றை விசிறினால் கூடிய பயனைப் பெறலாம். கிழமைக்கு மூன்றுமுறை இதனை விசிறுவதால் இப் பூச்சிகளை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தமுடியும். அத்துடன் இதனால் எவ்விதமான பக்க விளைவுகளும் ஏற்படாது.

நா.குகானந்தன்,
விவசாயத்திணைக்களம்,
முல்லைத்தீவு.

# கம்போடியா நாட்டில் 15 இலட்சம் பேரின் மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

*கம்போடியா நாட்டை ஆண்ட ஹாமீர்ரோச் என்ற அரசர் காலத்தில் கம்போடியாவைச் சேர்ந்த 15 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். இவர்களது உடல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டன. தற்போது இந்த உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. இதில் எடுக்கப்பட்ட 15 இலட்சம் பேரின் மண்டை ஓடுகள் அனைத்தும் தற்போது ஒரே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.*

# மலைப்பகுதியில் வாழ்வோருக்கு இருதய ஆரோக்கியம்

கடல் மட்டத்திலுள்ள பகுதிகளில் வாழும் மக்களைவிட கடல்மட்டத் திலிருந்து சில ஆயிரம் அடி மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்குக் கூடுதல் இருதய ஆரோக்கியம் ஏற் படுகிறது என்றும் கடல்மட்டப் பகுதி மக்களுடன் ஒப்பிடும் போது அவர்கள் நீண்டநாள் வாழ்கிறார்கள் என்றும் கிரீஸ் நாட்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித் துள்ளனர்.

ஆயிரத்து 500 மக்களிடம் 15 ஆண்டு தொடர்ந்து கண் காணிப்பு நடத்தி இதைக்கண்டு பிடித்துள்ளனர். ஆனால் கடல்மட்டப்பகுதியில் சிலகாலம் வாழ்ந்து அங்கு இருதய நோய்ப்பாதிப்பு ஏற்பட்டவர்கள் பிறகு மலைப்பகுதி போன்ற உயர்ந்த இடங்களுக்குச் சென்று வாழும்போது அவர் களுக்கு இருதயநோய் ஆபத்து அதிகமாகும் வாய்ப்புள்ளது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மின்னணுச் சிகிச்சை

*பண்டைய காலந் தொட்டு உளநலம் பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்த பல்வேறு வைத்திய முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அது வளர்ச்சியடைந்து தற்போது மண்டை ஓட்டில் துளையிட்டு மூளை சம்பந்தப் பட்ட நோய்களுக்கு சிகிச்சை யளிக்கப்படுகின்றன.*

*எனினும் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள தொழில் நுட்பத்தின்படி உளநலம் பாதிக்கப்பட்ட ஒருவரை குணமாக்கு வதற்கு நான்கு மின்னணுக்களை ஒருவரது மூளையில் செலுத்தி சம அளவு வலுக்கொண்ட மின் கலத்தை நெஞ்சில் வைத்து ஆழியை அழுத்தும்போது அவரது மூளைக்கு மின்சாரம் செலுத் தப்படும். இதன் விளைவாக அவர் படிப்படியாக குண மடைவார். இந்த சிகிச்சை அண் மையில் பிரபல துவிச்சக்கர வண்டி ஓட்டப்பந்தய வீரர் மைக்கல் என்பவருக்கு மேற் கொள்ளப்பட்டு வெற்றி காணப் பட்டுள்ளது.*

*மனதைக் கட்டுப்படுத்தும் சக்தி ஒழுங்கற்றிருப்பதன் அறிகுறியே மேற்படி உளநலம் பாதிக்கபட்டவர்களின் நடவடிக்கைகள் ஆகும். இவர்கள் மருத்துவசிகிச்சை மூலம் குணப் படுத்தமுடியாதவர்கள். இவர்களுக்கே மேற் படி மின்சார தொழில்நுட்ப உதவியுடன் சிகிச்சையளிக்க புதிய தொழிநுட்பம் வழிவகுத் துள்ளது.*

# தலைமுடி நரைப்பது ஏன்?

தலைமுடி நரைப்பது, நரைக் காமல் இருப்பது ஆகியவை பரம் பரைப் பண்புகளில் ஒன்று. இப் போது நமக்கு தலையிலும் முகத் திலும் கொஞ்சம் முடி முளைக் கிறது. மனிதன் குகையில் வாழ் ந்தபோது உடலெங்கும் கரடி போல முடி நிரம்பியிருந்தது. அந்தக் காலக்கட்டத்தில், உடல் முடி நரைத்து நிறம் மாறுவது ஏதோ ஒரு வகையில் நன்மை யாக இருந்திருக்க வேண்டும். இப் போது முடி குறைந்து கொஞ் சமாக தலையில் மட்டும் நின்று விட்ட போதிலும், நரைக்கும் இயல்பு மட்டும் மாறவில்லை. நிறையப் பேர்கள் முடி நரைக் கக் கூடாது என்று ஆசைப் படுகிறார்கள். அதை மறைக்க 'டை' அடிக்கிறார்கள். ஆனால் ஒரு காலத்தில் இந்த வேடமே தற்காப்புக்கு பேருதவியாக இரு ந்திருக்கிறது.




*இங்கு காணப்படும் வாகனம் தனிநபர் ஒருவர் மட்டும் பயணிக்கக் கூடிய ஒன்றாகும். ஜேர்மன் தயாரிப்பான இவ்வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 100 கிலோ மீற்றர் வரை செல்லக் கூடியதாகும். அத்துடன் இது குறைந்த நிறையைக் கொண்டதுமாகும்.*



யுத்த நடவடிக்கைகளின் போது முன்னெச்சரிக்கையாக இருப்பதற்கு ஏற்ற கணினி ஒன்றை சிங்கப்பூர் நிறுவனம் தயாரித்துள்ளது.இது "Vசற்றலைட்" என அழைக்கப்படுகிறது. யுத்தம் நடைபெறும்போது ஏவுகணைத் தாக்குதலில் இருந்துபாதுகாக்கும். அதாவது ஏவுகணை ஒன்று ஒருவரை நோக்கி வரும் போது இந்தக் கணினி முன் கூட்டி அறிவிக்கும் எனவும் பாதுகாப்புத்தேடி ஓடவும் வகை செய்வதாகவும் கூறப்படுகிறது.

## காய்கறி, பழங்கள் புற்றுநோயைத்தடுக்கும்


பழங்கள், காய்கறிகளை அதிகம் சாப்பிட்டு வந்தால் உடலில் புற்று நோய் ஏற்படாமல் தடுக்கலாம் என்கிறது ஒரு ஆய்வு. செடிகள், மரங்களில் விளையும் காய்கறிகள், பழங்களை அதிகம் சாப்பிடுவோருக்கு குடல்ப் புற்றுநோய் உண்டாக வாய்ப்பில்லை. மேலும் இருதயத்திற்கும் இந்த உணவு வகை மிகவும் நல்லது. ஆனால் மார்புப் புற்றுக்கு இந்த உணவால் கூடுதல் பாதுகாப்பு ஏற்படும் வாய்ப்பில்லை. ஆனாலும் சில நாட்களுக்கு முன்பு அமெரிக்காவில் வெளியான ஆராய்ச்சி தகவலில் ஒலிவ் எண்ணை கலந்த உணவால் மார்புப் புற்றை தடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அது போல சர்க்கரை சத்து நிறைந்த உணவை கணிசமாகக் குறைக்கவேண்டும். சிவப்பு மாமிச உணவையும் குறைப்பது நல்லது. இதை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு குடல் புற்று ஏற்பட 50 சதவீத கூடுதல் வாய்ப்பு உள்ளது.

# கிளி.பொறியியல் ஆய்வுகூடமும் அதன் பயன்பாடும்

**சமாதான** நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து வன்னிப்பகுதியில் நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான கட்டடங்கள் உறுதியானதாகவும் நீண்டகாலப் பயன் பாட்டிற்கு உகந்தவையாகவும் பொருத்தமானதுமான கட்டடங்களாக நிறுவுவதற்கு அவற்றின் தரங்களை உறுதிசெய்ய வேண்டிய அவசிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனால் கிளிநொச்சி மாவட்ட கட்டடத் திணைக்களம் பொறியியல் ஆய்வு கூடம் ஒன்றை நிறுவி, அதன் மூலம் பொறியியல் உபகரணங்களையும் பெற்றுள்ளது.

மேற்படி பொறியியல் உபகரணங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படவுள்ள கட்டடங்களின் உறுதித்தன்மை நியம அளவில் இருப்பதை உறுதி செய்ய முடியும்.

கட்டடத்திற்குப் பயன்படுத்தப்படும் கல், கொங்கிறீற், கம்பி, சீமெந்து,நீர் என்பன வற்றை உறுதியான தரமானவையாகத் தெரிவுசெய்து கொள்வதற்கும் உரிய அளவில் கலவை இருப்பதை உறுதி செய்யவும் இந்த உபகரணங்கள் மிகவும் அவசியமானவையாகவும் நம்பிக்கை வாய்ந்ததாகவும் உள்ளதுடன், இந்த உபகரணங்களின்


பிரதம பொறியியலாலர் சுந்தரலிங்கம சுந்தரகுமார்

உதவியுடன் நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் உறுதியானவையாக அமையும் எனவும் எதிர்பார்க்கலாம்.

அத்துடன் இவ் ஆய்வுகூடமானது கிளிநொச்சியில் அமைக்கப்பட்டது, மிகவும் ஒரு முக்கியம் வாய்ந்ததாகத்தான் கருதப்படுகின்றது. ஏனெனில் இலங்கையிலேயே இப்படியான பொறியியல் ஆய்வுசடம் ஒன்று கொழும்பில்தான் உள்ளது. அடுத்தது வடபகுதிக்கான ஓர் ஆய்வுகூடமாக கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழீழ நிர்வாக சேவையின் பங்களிப்பும் மகத்தானது. ஆய்வுகூடத்தினதும் பொறியியல் உபகரணங்களின் பயன்பாடுகள் பற்றியும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கட்டடத்திணைக்கள பிரதமபொறியியலாளர் சு. சுந்தரகுமார் அவர்களிடம் நாம் சென்று கேட்டபோது அவர் கூறியவையும் பொறிமுறை உபகரணங்களின் முக்கியத்துவத்தினையும் இங்கு தருகின்றோம்.

**கேள்வி:- இந்த ஆய்வு கூடமும் அதன் உபகரணங்களும் எந்தளவுக்கு அவசியமானதென நீங்கள் கருதுகிறீர்கள்.**

பதில்:-வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கு அதாவது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுப்னியா,மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகத்தான் இந்த ஆய்வுகூடம் அமைந்துள்ளது.

ஏனெனில் எமது பகுதிகளில் பெருமளவான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்ற இக்காலகட்டத்தில் கட்டடங்கள் பற்றிய பூரண அறிவையும், அதற்கு பயன்படுத்தப்படுகின்ற பொருட்களின் தராதரங்களையம் உறுதியாக நம்பமுடியாத நிலையில் இருந்த எமக்கு இந்த ஆய்வு கூடம் முக்கியத்துவம் வாய்ந்தாகவுள்ளது.

இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் கட்டப்படுகின்ற பாரிய கட்டடங்கள் அனைத்தும் உறுதிவாய்ந்தவையாக அமைக்க முடியும் என் நம்புகின்றேன். அதற்கு முன்உதாரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அமைகின்றது. இது இந்த வருடத்திலேயே கட்டப்படுகின்ற அரசாங்க கட்டடங்களில் மிகவும் பெறுமதி வாய்ந்த கட்டடமாகும். ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் கட்டப்படும் இவ் வைத்தியசாலைக் கட்டுமானப் பணியிலேயே முதன் முதலாக எமது ஆய்வுகூட உபகரணங்களைப் பயன்படுத்தி நியம அளவுகள் தரங்கள் மூலம் உறுதிசெய்யப்படவுள்ளது.

அத்துடன் இந்த உபகரணங்கள் அரசாங்க கட்டடங்களுக்கு மட்டுமல்லாமல் தனியார் கட்டடங்களுக்கும் பயன்படுத்தலாம். மேலும் இவ் ஆய்வுகூடத்தினை மையமாகக் கொண்டு இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்களைத்தரமானதும் அழகானதுமாக அமைக்க முடிவுகள் எடுத்துள்ளோம். கடந்த காலங்களில் இவற்றை செய்வதற்கு உபகரணங்களும், தொழிலாளர்களும் இல்லாமல் இருந்தது. இப்போது இவை இரண்டும் இருப்பதனால் செய்யப்படும் வேலைகளையும் தரம் வாய்ந்ததாகவும் சரியானதாகவும் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும் மண்ணியல் ஆய்வு ஒன்றினை மேற்கொள்ள நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் வினோதராஜா என்பவர் மேற் கொண்டு வருகின்றார். அதுவும் பூர்த்தியாகி விட்டால் கொங்கிறீற் தொடர்பான விடயங்களைக் கட்டடத்திணைக்களமும்,மண்ணியல் சார்ந்த விடயங்களை நீர்ப்பாசனத் திணைக்களமும் மேற்கொள்ள , வன்னியிலேயே எவ்வகையான ஆய்வினையும் மேற்கொள்ளக் கூடியதொரு வாய்ப்பை ஏற்படுத்திவிடலாம். அதன் மூலம் வடபகுதி முழுவதும் இதனைப் பயன்படுத்தமுடியும்.

**கேள்வி:- இந்த ஆய்வு கூடத்தின் எதிர்கால விருத்தி பற்றிக் கூறமுடியுமா?**

பதில்:- எமது ஆய்வுகூடம் இன்னும் வளர்ச்சியடைய இருக்கின்றது. நிறைய உபகரணங்கள் இன்னும் தேவைப்படுகின்றது. அதாவது ஒவ்வொருவகையான மாதிரிகள் ஆய்வுகூடத்தில் வைக்கப்பட வேண்டும் என பல பொறியியலாளர்கள் கூறினார்கள். இது போன்று மேலும் பல கருவிகள் எமது ஆய்வு கூடத்திற்குத் தேவையாக உள்ளன.

முக்கியமாக இந்த ஆய்வு கூடத்தைக் கிளிநொச்சியில் நிறுவுவதற்கு நிகொட் திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் முக்கிய பங்காற்றினார். இவ் ஆய்வுகூடத்தினை நிறுவுவதற்கும் தற்போது வந்து சேர்ந்துள்ள உபகரணங்களுக்கும் மொத்தம் 17 இலட்சம் ரூபா செலவாகியுள்ளது.

த.குகனேஸ்வரன்

இன்னம் இருபது லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையுள்ளது. இந்த ஆய்வுகூடம் நிறுவியதற்குப்பின் மேற்குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகள் அனைத்தும் பூரணமானதாக அமைக்கப்படுவதோடு, ஏற்கனவே இருந்த சிறு சிறு குறைபாடுகள் அனைததையும் நீக்கிவிடலாம் என்றும் நம்புகின்றோம்.

இவ் ஆய்வுகூடத்தினை நிறுவுவதற்கும் ஆய்வுகூட உபகரணங்ளைப் பெற்றுத் தருவதிலும் தமிழீழ நிர்வாகசேவையும் எமக்கு உதவி புரிந்திருக்கின்றது. அதன் மூலம் மேலும் துரிதகதியில் இதை அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

அத்து:_ன் நிர்வாகசேவையுடன் இணைந்து புதிய கட்டடங்களை நிறுவும் ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தை அழைத்து அவர்களுக்கு ஒரு பூரண விளக்கத்தை அளிக்க உள்ளோம்.

இனிவரும் காலங்களில் அமைக்கப்படும் கட்டங்களை அழகாகவும், தரமாகவும் உறுதியானதாகவும் அமைக்க வேண்டும். அது தொடர்பாக அவர்களுக்கு விளக்கமளிக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

ஆனால் எங்களைப் பொறுத்தமட்டில் ஒரு விடயம் வெற்றியளித்திருக்கின்றது. என்னவென்றால் இந்த ஒப்பந்தக்காரர்களில் பெரும்பாலனவர்கள் "நீரப்" திட்டத்தின் மூலம் தான் புதிய திட்டங்களை மேற்கொண்டார்கள். அது கிளிநொச்சியில் மட்டும்தான் 100 வீதம் பூர்த்தியாகியுள்ளது.

இந்த விடயத்தை உலக வங்கி அறிந்தவுடன் ஆச்சரியப்படுகின்றது. ஏனென்றால் கிளிநொச்சி முல்லைத்தீவில் தொடங்கப்பட்ட கட்டடங்களுடன் வேறு மாவட்டங்களில் ஆரம்பிக்கபட்ட கட்டடங்கள் இன்னும் முடிக்கப்பெற வில்லை. அத்துடன் கிளிநொச்சி வைத்திய சாலை கட்டட வேலைகள் அவர்களுக்கு இன்னும் நம்பிக்கையை வளர்த்துள்ளது.

இதற்கு ஒரு காரணம் நிர்வாகசேவை கூடியகவனம் எடுத்துள்ளது. உடனுக்குடன் சென்று பார்வையிட்டு ஒப்பந்தக்காரரை நெறிப்படுத்தி வந்துள்ளது. உடனுக்குடன் அது தொடர்பான கூட்டங்களையும் வைத்துப் பூர்த்தியாக்கியுள்ளனர்.

இவ்வாறான முயற்சியால் கிளிநொச்சியில் பல ஒப்பந்த வேலைகள் வெற்றியளித்திருக்கின்றது.

ஆனால் பாடசாலைத் திட்டங்கள் வேறு நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டதால் அவை இதற்குள் அடங்கவில்லை. அதற்குக் காரணம் என்னவெனில் வலயக்கல்விப் பணிமனைகளில் பொறியியலாளர் இல்லை. தொழில்நுட்பவியலாளர்கள் தான் அவற்றை மேற்கொள்கின்றனர்.

ஆனால் நாங்கள் அவற்றை மாற்றியமைக்க முடிவு எடுத்துள்ளோம். பாடசாலைக் கட்டடங்களின் அமைப்புக்களையும் மாற்றி புதிய வடிவங்களில் அமைக்கத் தீர்மானித்திருக்கின்றோம்.

இன்னுமொரு வியடத்தையும் நாங்கள் ஆரம்பிக்கவுள்ளோம். என்னவென்றால் இங்குள்ள இளம் பொறியியலாளர்களுக்கு ஒரு பட்டயப் பொறியியல் பயிற்சி நெறியியை வழங்க முடிவு எடுத்துள்ளோம். இதனை ஒரு தனியார் நிறுவனம் பொறுப்பெடுத்து செய்யுமாக இருந்தால் கூடியவிரைவில் ஆரம்பிக்கலாம்.

அப்படி இல்லாவிட்டாலும் நாங்களாவது அதனைப் பொறுப்பெடுத்து வருடத்தில் இரண்டு பொறியியலாளருக்காவது பயிற்சி கொடுத்து வந்தால் இனிவரும் காலங்களில் எமது பகுதியில் மேறகொள்ளப்படும் பெரிய திட்டங்களை அவர்களூடாகவே நிறைவேற்ற முடியும் என்று நினைக்கின்றோம்.

இந்தப் பயிற்சியினை பெறுபவர்களுக்குரிய சான்றிதழ் பரீட்சை கொழும்பில் நடைபெற்று அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் வழங்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கவுள்ளோம்.

**கேள்வி:- தறபோது தங்களுக்கு வந்து சேர்ந்துள்ள ஒவ்வொரு உபகரணங் களின் செயற்பாடு-பயன்பாடு பற்றி கூறமுடி யுமா?**

## கவர் மீற்றா

பதில்:-இது பொறியியல் ஆய்வு கூடத்தில் உள்ள் உபகரணங்களில் முக்கியம் வாய்ந்தது இந்த கவர் மீற்றர் ஆகும். இதனுடைய பயன்பாடு ஒப்பந்தக்காரர் ஒருவர் பொறியியலாளர்கள் இல்லாத வேளையில் ஒரு தூணை நிறுவி விட்டார் எனில் அத்தூண் உரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை அறிய உதவுகிறது.

எப்படியெனில் ஒரு தூணுக்கு மூன்று கம்பிகள் வைத்துத்தான் கட்டப்பட வேண்டுமென் றால் அந்த மூன்று கம்பிகளும் பொருத்தப்பட்டுள்ளனவா? ஒழுங்கான அளவுகளில் பொருத்தப்பட்டுள்ளதா? என்பதை இந்த கவர் மீற்றர் காட்டும்.

கவர் மீற்றரைத் தூணின் மேற்பகுதியாக வைத்து நகர்த்தும் போது கம்பி வைக்கப்பட்டுள்ள தூரம், எவ்வளவு என மில்லி மீற்றரில் காட்டும். அதுபோல் ஒவ்வொரு கம்பியையும் தாண்டும் போது கவர் மீற்றரில் ஓசை ஒன்று வெளிவரும். அதன் மூலம் எத்தனை கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன என்பதை அறியலாம்.



Covermeter propomeer 4 vebar locator

அல்லது பிழையான ஒரு வேலைப்பாட்டை செய்திருந்தால் கவர் மீற்றரிலும் செற்றிங்கைக் கையாண்டு அதன் மூலம் எவ்வாறு கம்பிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பதை இனம் காணவும் இது பயன்படுகின்றது.

இந்தக் கவர் மீற்றர் மிகவும் இறுதியாக தயாரிக்கப்பட்ட ஒரு உபகரணமாகும். இது லண்டனில் இருந்தே எமக்குக் கிடைத்தது. இதனைக் கொண்டு சென்று பரிசோதனை செய்யவும் முடியும்.

இவற்றை ஒரு பயிற்றப்பட்ட பொறியியலாளரே கொண்டு சென்று பார்வையிடுவார்.

## விக்கட் மோல்ட் அப்பசெற்

விக்கட் மோல்ட் அப்பசெற் உபகரணம் என்று சொல்லப்படுகின்ற உபகரணம் தரமறியும் கருவி இதில் பன்னிரண்டு எம்மிடம் இப்போது உள்ளது. இதில் ஒப்பந்தக் காரர் கேட்கும் போது நாங்கள் கொடுக்கவுள்ளோம். இது வடக்கில் எந்தமாவட் டக்காரர் கேட்டாலும் இதை வழங்கக் கூடியதாகவுள் ளது.


Vicat mould

## கொங்கிறீற் கியூப்ரெஸ்ட்ரர்

சீமெந்தின் தரத்தினை அறியக் கூடிய கொங்கிறீற் கியூப் ரெஸ்ரர் உபகரணமும் உள்ளது. சீமெந்தின் தரத்தினை ஒரு மணித்தியாலயத்தில் அறியக் கூடியயதாக இது உள்ளது.


Compression machine
Curing large tank

## சிலம்கோண்

சிலமகோண் என்ற உபகரணத்தின் பயன்பாடு என்னவென்றால் ஒரு கொங்கிறீட்டுக்குத்தேவையான நீர் எவ்வளவு? என்பதையும், கலவை செய்யும்போது நீர் கூட குறைய பாவிக்கப்படுகின்றதா? என்பதையும் அறிவதற்கு இந்த சிலம்கோண் என்ற உபகரணம் பயன்படுகின்றது. இதன் மூலம் கலவைகளை உறுதியானதாகப் பெறமுடியும். இவ்வாறாக மொத்தம் நான்கு உபகரணங்கள் மட்டுமே எம்மிடம் தற்போது உள்ளது.


Slump cone

இவ்வாறு பெறுமதிமிக்க பொறியியல் உபகரணங்களைக் கையாளுவதற்கு எமது திணைக்களத்திற்கு புதிதாக வருகைதந்துள்ள பிரதிப் பிரதம பொறியியலாளர் மகிந்தன் முன்வந்துள்ளார்.

இவருக்கு மேலதிக பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு NDRO என்ற நிறுவனத்தினா் முன்வந்துள்ளனர். இவருக்கு இரண்டு நாட்கள் பூரண பயிற்சி வழங்கப்படவுள்ளது. இவர் அங்கு சென்று அப்பயிற்சியினை முடித்து வந்தபின்னர் இந்த உபகரணங்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்த முடியும்.


இதனை நாங்கள் உடனடியாகப் பயன்படுத்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக் கட்டடம் உள்ளது. அவற்றிற்கு இந்த உபகரணங்களைக் கையாள்வது பொருத்தமானதாகும் என்றார்.

# ஐ.தே.கட்சி, ஜே.வி.பியின் கனவுகள் நனவாகுமா?

"ஜே.வி. பியினருக்கு 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஐந்தாகவோ பத்தாவோ குறைக்கத் தேவையில்லை.இந்த 39 பேரும் நாட்டுக்கு வேண்டியவர்கள் " என ஐ.தே.கட்சி உறுப்பினர் ஒருவர் பத்திரிகை ஒன்றிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஏன் என்றுமில்லாதவாறு ஜே.வி.பி.மீது ஐ.தே.கட்சிக்கு இவ்வளவு அக்கறை ஏற்பட்டிருக்கின்றது என எண்ணத் தோன்றுகிறது.அது ரணிலினதும் கட்சியினதும் ரகசியமாக இருக்கலாம். காரணம் ரணிலுக்கு தற்போது தேவையாக இருப்பது சந்திரிகாவை அரசியலிலிருந்து இல்லாதொழிப்பதேயாகும். அதற்காக அவர் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதை தடைசெய்யவேண்டும். அப்படியாயின் அதற்கு ஒரு வழி சமாதான ஒப்பந்தத்தை ரத்துச்செய்வதாகும். இவ்வாறு ரத்துச்செய்வதன் மூலம் உள்நாட்டில் மீண்டும் ஒரு போர் மூளும். அதன் மூலம் வாக்களித்தபடி வெளிநாட்டு நிதிஉதவிகளும், கடன்களும் கிடைக்காமல் போகும். நாட்டின் பொருளாதாரம் மீண்டும் பூச்சியத்துக்குள் வந்து விடும். அத்துடன் சந்திரிகாவின் அரசும் பதவி கவிழ்க்கப்பட்டு அவர் அரசியலை விட்டு விலகநேரிடும் இது ரணிலுக்குள்ள ஒரு உபாயமாக இருக்கலாம்.

ஆனால் சந்திரிகாவோ கிடைக்கும் அனைத்து உதவிகளையும் பெற்று இந்த நாட்டைச் சிங்கப்பூரைப்போன்று ஒரு செல்வந்த நாடாக ஆக்கும் எண்ணத்தில் இருக்கின்றார். அத்துடன் சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றியளித்து விடுதலைப்




புலிகளினதும் ஏனைய தமிழ் கட்சிகளினதும் ஆதரவு கிடைத்தால் அவரை எதிர்க்க-வீழ்த்த எந்த சக்தியாலும் முடியாது போகும். அத்துடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவந்து அவர் பிரதமர் ஆகும் வாய்ப்பும் அதிகரிக்கும். ஆகவே ரணில் சமாதான ஒப்பந்தத்தை ரத்துச்செய்து அதன் மூலம் சந்திரிகாவை அரசியலிலிருந்து விலக்க முடியாவிட்டால் அவர் வேறொரு வழியை கையாளவேண்டும். அதாவது நாட்டின் விவசாய வர்க்கத்தினர் முதல் கொழும்பிலுள்ள பெரும் வர்த்தகர்கள் உள்ளிட்டோருக்கு சந்திரிகா அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டவேண்டும். அதாவது சந்திரிகா ஆட்சிக்கு வந்ததும் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதாகவும் மற்றும் சலுகைகள் வழங்குவதாகவும் கூறியே வெளிநாட்டுக்கடன்களைப் பெற்றார். இந்த இருவழிகளிலும் சந்திரிகா மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தி அவரை கவிழ்க்க ரணில் முயற்சி செய்யலாம்.ஆயினும் அது இரண்டுமே அவரால் செய்யமுடியாது காரணம் சமாதானத்தை ஏற்படுத்தியதும் ரணிலின் அரசே. ஐ.தே.கட்சி அரசால் அதற்கு எதிராக வீதியில் இறங்கி போராட்டம் நடத்த முடியாது.

உலக வங்கியினதும், சர்வதேச நிதிநிறுவனங்களினதும் நிபந்தனைகளையும் அறிவுறுத்தல் களையும் நடைமுறைப் படுத்த சுதந்திர வர்த்தக மையத்தை அறிமுகப்படுத்தியதும் ஐ.தே.கட்சி அரசாங்கமே. எனவே இவற்றுக்கு குந்தகம் விளைவிக்க ஐ.தே.கட்சியால் முடியாது.

ஆயினும் ஒரு விடயத்தில் ஜே.வி.பி. அந்தப் பணியை செய்கின்றது. அதாவது சந்திரிகாவின் சமாதான நடவடிக்கைகளுக்கு அது முட்டுக்கட்டை போடுகின்றது. அத்துடன் வெளிநாட்டு நிதியுதவிகள், கடன்களின்அடிப்படையில் செயலாற்றவும் ஜே.வி.பி. அனுமதிப்பதில்லை.

இந்த முட்டுக்கட்டைகளால் சந்திரிகா அரசாங்கம் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடமுடியாதுள்ளதுடன், சந்திரிகா அரசியல் அழிவையும் எதிர்கொண்டுள்ளார். அவ்வாறாயின் ஐ.தே.கட்சி விரும்புவதையே ஜே.வி.பி. யினர் செய்கின்றனர். என்று தோன்றுகிறது. ஆயினும் ஜே.வி.பி. தலைவர், ஐ.தே.கட்சி அரசமைப்பதை ஒரு போதும் விரும்பவில்லை. அவர்மட்டும் மன்றி கட்சியின் முழு உறுப்பினர்களும் அதனை விரும்பவில்லை. இந்தவகையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஜே.வி.பி. உஷார்ப்படுத்துகின்றது. அத்துடன் ஜே.வி.பியினரை சந்திரிகா விமர்சிக்கும் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சந்திரிகாவுக்கு பைத்தியம் என்று தெரிவிக்கின்றனர். அத்துடன் ஜே.வி.பி.யே அரசின் பாதுகாவலன் என்றும் எண்ணுவதை ஜே.வி.பி. யினர் விரும்புகின் றனர். அவ்வாறு கூறுபவர்களை ஜே.வி.பி. தம் வசப்படுத்தவும் தமது பலத்தை அதிகரித்து அரசமைக்கவும், அவர்கள் திட்டமிடுகின்றனர். ஜே.வி.பி. யினர் ஐ.தே.கட்சியை அரசமைக்க விடுவதில்லை என்று கூக்குரல் இடும்போது சந்திரிகா சமாதானம் பற்றியும், தனியார்மயப் படுத்தல் பற்றியும் கூறிக்கொண்டு ஜே.வி.பி. யை விமர்சிக்கும் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் வெறுப்புக்கு சந்திரிகா உள்ளாக இடம் இருக்கின்றது. இது சந்திரிகாவுக்கும் தெரிந்ததே. அரசு சில நன்மைகளைச் செய்யும்போது தானும் அதில் பங்கேற்று, விலைவாசி உயர்வுபோன்ற மக்களுக்கு சுமையை அரசுவிடுக்கும் போது அதிலிருந்தும் தப்பிக்கொள்ளவும் ஜே.வி.பி கற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் எல்லாப் பழிகளையும் சந்திரிகா மீது சுமத்தி அதன் மூலம் சந்திரிகா மக்களின் வெறுப்பை சம்பாதித்து அரசியலிலிருந்து விலகிவிடட்டும் என்பதும் ஜே.வி.பி. யின் கபட தந்திரமாகும். அதற்கு உதாரணமாக கல்வியமைச்சு மீது ஜே.வி.பி. பாய்வதும் அதன்பொறுப்பு சந்திரிகாவிடம் இருப்பதாலாகும்

சமாதான முன்னெடுப்பில் அவர் முற்று முழுதாக ஈடுபாடு கொண்டிருப்பதையும் , அதன் மூலம் நாட்டை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்து சமாதானத்துக்காக நோபல்பரிசு அவருக்கு கிடைத்து விடலாம் என்றும் ஜே.வி.பி. எண்ணுகிறது. சமாதானச் செயலக ஊழியரை தாக்குவதும், சமாதான வழிகளில் சந்திரிகாவுடன் ஒத்துழைக்க மறுப்பதும் அதனாலேயே. அது போன்றே உலக வங்கிப்பிரதிநிதிகள் மீது ஜே.வி.பி.யினர் சீறிப்பாயும் போது அதன்விளைவை சந்திரிகாவே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

நாட்டில் தற்போது பெரும் பிரச்சினைக்குள்ளாகியிருக்கும் மின்சாரசபையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நட்டத்தில் இயங்குவதால் அவற்றை தனியார் மயப்படுத்த வேண்டும் என்ற வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனத்தின் நிபந்தனையையும் ஜே.வி.பி. மறுக்கின்றது. அதனால் வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் போகவும், விலைவாசிகள் உயரவும், வேலைவாய்ப்பு குறையவும் வாய்ப்பு ஏற்பட இடமிருக்கின்றது.இதன் தாக்கமும் சந்திரிகாவின் அரசியலைப் பாதிக்கும் இதற்காகவே சந்திரிகா ஜே.வி.பி. மீது போர்க்கொடி தூக்குகின்றார். இவ்வாறு ஜே.வி.பி.யுடன் அவர் மோதும் போது ஆதரவளிக்க இருப்பது ஒருசில பிரதியமைச்சர்கள் மட்டுமே. குறைந்தது ஜே.வி.பி.க்கு எதிராக அவரின் சகோதரர் அனுரா பண்டார நாயக்க கூட அவருக்கு ஆதரவு தெரிவிக்கமாட்டார்.

1960 ஆம் ஆண்டு சிறிமாவோ ஆதரவின்றி இருந்த நிலையில் கட்சிக்காரர்களே ஒன்றிணைந்து அம்மாவைக் காப்பாற்றுங்கள் என்று கூக்குரலிட்டனர். அதேபோல இன்றும் சந்திரிகாவை காப்பாற்ற கூக்குரல் இட கட்சியினர் முன்வரவேண்டும். காரணம் சந்திரிகாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகப் பேசவும் பாதுகாக்கவும் கட்சிக்குள் ஒருவரும் இல்லாத நிலை இருப்பதாகும்.

இதன்நன்மை தற்போது ரணிலையே சேரும் அதனாலேயே ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் 39 பேரை குறைத்து கொள்ளக்கூடாதென குரல் எழுப்புகின்றனர். அவர்களுக்குப் புதிதாக ஆதரவு தெரிவிப்பதும் அதற்காகவே.

ஜே.வி.பி. உறுப்பினர்கள் குறைந்து போனால் மிகுதியானோர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து விடுவர். அதனால் அக்கட்சிக்கு ஆதரவு அதிகரிக்கும் அதனை ஐ.தே.கட்சி விரும்பாது. ஐ.தே.கட்சி சிறிலங்கா சுதரந்திரக்கட்சியை ஒழிக்கவே திட்டமிடுகிறது. ஜே.வி.பியினர் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதே ஒழிய அவர்களால் ஆட்சி நடத்தமுடியாது என்பதும் ஐ.தே.கட்சியின் கருத்தாகும். சர்வதேச சமூகத்தினதும், வர்த்தக சமுகத்தின் அனுமதியைப் பெற்றே அவர்கள் ஆட்சி நடத்த வேண்டும். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பது ஐ.தே.கட்சிக்கு சுலபமான காரியமல்ல. அதற்காகவே ஜே.வி.பி.யினரை பகடைக்காயாக்க ரணிலின் கட்சி முயற்சிப்பதோடு அவர்களுக்கு ஆதரவாகவும் பேசத்தொடங்கியுள்ளது.

ஜே.வி.பியினர் மூலம் சந்திரிகா வீழ்ச்சியடைந்தால் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தலைவர் ஒருவர் இல்லாது போய் விடுவார். அக்கட்சியிலுள்ள ஜே.வி.பி. க்கு நம்பிக்கையுள்ளோரையும் ஜே.வி.பி. தன்வசப் படுத்திவிடும். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆயுளும் முடிவுக்கு வரும். இவையே ஐ.தே.கட்சியின் கணிப்பாக இருக்கின்றது.

இந்தக் கணிப்பீட்டை சந்திரிகாவும் அறியாதவரல்ல. அவர் மட்டுமன்றி கட்சியின் சில முக்கிய உறுப்பினர்களும்தெரிந்தே வைத் துள்ளனர். ஜே.வி.பி.யை விமர்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிலர் ஐ.தே.கட்சியின் ஒப்பந்தக்காரராக இருக்கலாம்.

ஆனால் இந்த விளையாட்டுக்கள் ஒன்றும் சந்திரிகாவிடம் பலிக்காது. காரணம் யானையை (ஐ.தே.கட்சி) அடக்கும் அங்குசம் அவரிடமே இருக்கின்றது.இவ்விரு கட்சியினரதும் ரகசியங்களை சந்திரிகா அறிந்தே வைத்திருக்கின்றார்.

இதனால் ஜே.வி.பி. யினதும் ஐ.தே. கட்சியினதும் கனவு நனவாகுவது சுலபமான காரியமன்று.

*உப்புள் ஜோசப் பர்ணாந்து*
*(லங்காதீப)*
**தமிழில் - வடிவேல்**

## தேசப்பற்றாளரின் மாநாட்டிலிருந்து ஊடகவியலாளர் வெளியேற்றம்

(கொழும்பு)

மகரகமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மாநாட்டிற்கு செய்தி சேகரிக்கச் சென்ற "ஜங்ஏசியா" ஊடகவியலாளர்கள் மாநாட்டு ஏற்பாட்டாளர்களால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பி யின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச மற்றும் பலர் கலந்து கொண்ட இந்த மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக மண்டபத்தில் அமர்ந்திருந்த இந்த "ஜங்ஏசியா" ஊடகவியலாளர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்கள் ஏற்பாட்டாளர்களால் மண்டபத்திற்கு வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் சார்பானவர்கள் எனக் கூறியே வெளியேற்றியதாகவும், இது பத்திரிகைத் தருமத்தை மீறும் செயலெனவும் கொழும்பு ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

## பெண் கைது

திருகோணமலை நிலாவெளிப்பகுதியில் வேலூரில் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். சோதனைச்சாவடியொன்றில் இந்தப் பெண் மீது சந்தேகம் கொண்டபடையினர்அவரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து டைனமைற் குச்சிகளை கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த பெண் குச்சவெளி காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## பத்திரிகையாளர் ஆதி. குமணனின் மறைவிற்கு அவுஸ். தமிழர் அனுதாபம்

தமிழ்ப் பத்திரிகை உலகில் தன்னிகரற்ற பத்திரிகையாளரும், மலேசியாவில் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்த வரும், சிறந்ததோர் சமுதாய சிந்தனை வாதியுமான அமரர் ஆதி. குமணன் அவர்களின் மறைவுக்கு அவுஸ்திரேலிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழுஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துள்ளது.

தமிழீழத்தில் தமிழர்கள் படுகின்ற துன்ப துயரங்களை அன்றாடம் "மலேசிய நண்பன்" பத்திரிகையில் செய்திகளாகப் பிரசுரித்து மலேசிய மண்ணில் வாழ்கின்ற தமிழர்களுக்கும், தமிழீழத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கும் ஓர் உறவுப் பாலத்தினை அமைத்தவர் அமரர் ஆதி அவர்கள்.

ஈழத் தமிழர்கள் விடிவு பெற வேண்டும், அது தலைவர் பிரபாகரன் அவர்களின் காலத்தில் கைகூட வேண்டும். அப்போதுதான் உலகத் தமிழர்களுக்கு ஓர் தாயகம் தமிழீழத்தில் நிலை பெறும் என்ற நம்பிக்கையோடு பல உதவி களை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகச் செய்தவர். என தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

# கொலை செய்ய பணம் கொடுத்தேன் - ரவிசுப்பிரமணியம்


கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் இடம்பெற்றுள்ளது. கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவரான ஒப்பந்ததாரர் ரவி சுப்பிரமணியம் அரசதரப்பு சாட்சியாக வாக்கு மூலம் கொடுக்கையில் ஜெயேந்திரர் கூறியபடி சங்கரராமனை கொலை செய்ய ரூபா10 லட்சம் கொடுத்தேன்" எனத் தெரிவித்தார்.

ரவி சுப்பிரமணியம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்1994 ஆம் ஆண்டுலீலா என்ற பெண் ஜெயேந்திரரிடம, என்னை அறிமுகம் செய்து வைத்தார். லீலாவுடன் நான் காஞ்சிபுரத்துக்கு நிறையத் தடவைசென்று வந்தேன். அவர் ஜெயேந்திரருடன் தனிமையில் இருந்தபோது நான் வெளியே நிற்பேன். பிறகு ஜெயேந்திரர் எனக்கு ஒப்பந்தவேலை கொடுத்தார்.நான் மதியவேளையில் மடத்துக்கு போவேன், நிறைய சமயங்களில் சில பெண்களுடன் அவர் இருப்பதை பார்த்தேன். ஜெயேந்திரர் ஆபாசப்படம் பார்ப்பார் என தனது சாட்சியத்தில் ரவிசுப்பிரமணியம் மேலும் தெரிவித்தார்.

# வெங்கையா நாயுடு பதவியேற்றார்

அத்வானியின் வற்புறுத்தலால் பா.ஜ.க. துணைத் தலைவர் பொறுப்பை வெங்கையா நாயுடு ஏற்றார். 53 வயதான வெங்கையா நாயுடு 2003 ஆம் ஆண்டு அகில இந்திய பா.ஜ.க. தலைவராகப் பொறுப்பு ஏற்றார். நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல் மராட்டிய சட்டசபைத்தேர்தலில் பா.ஜ.க. தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கடந்த அக்டோபர் மாதம் 18 ஆம் திகதி தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தார். பா.ஜ.க.வில் பதவி எதுவும் வகிக்காமல் கட்சிக்கு பணியாற்றுவேன் என்று அறிவித்திருந்தார். வெங்கையா நாயுடுவை தொடர்ந்து பா.ஜ.க.தலைவராகஅத்வானி பொறுப்பு ஏற்றார். அவர் வெங்கையா நாயுடுவை பா.ஜ.க துணைத் தலைவராக்க முயன்றார். ஆனால் அந்தப் பதவியை ஏற்க வெங்கையா நாயுடு மறுத்துவந்தார்.அத்வானியின் நிர்ப்பந்தம் தாளாமல் துணைத்தலைவர் பதவியை ஏற்கவெங்கையா நாயுடு சம்மதித்துள்ளதாக பா.ஜ.க. பொதுச் செயலாளர் அருண்ஜெட்சி தெரிவித்தார்.

# நன்றி நவிலல்



## நடராசா காந்திகுமார்

(பொறியியலாளர்-நிர்வாக இயக்குநர்)

CIVI-MEC CONSTRUCTION (PVT) LTD

மண் மகிழ 23 - 02 - 1976

கண் நெகிழ 01 - 04 - 2005



அமரர் பொறியியலாளர் நடராசா காந்திகுமார் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்கள், அவசரமான நேரத்தில் உதவிய நண்பர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் உதவிய வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி நண்பர்கள் SLRC உத்தியோகத்தர்கள், அரசாங்க அதிபர், தமிழீழ காவல்துறையினர் மற்றும் எல்லா நண்பர்களுக்கும் அமரர் காந்தியின் குடும்பத்தவர்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

(5981) LAND MAARK ENGINEERING (PVT) LTD

# சாவு அறிவித்தல்

## திருமதி.மகேஸ்வரி நடராசா



துன்னாலை வடக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மகேஸ்வரி நடராசா 06.04.2005 புதன்கிழமை இரவு இறைபதமடைந்து விட்டார். அன்னார். அமரர் ஆறுமுகம் நடராசா J.P (முன்னாள் மாவட்ட நீதிமன்றச் செயலாளர்-பருத்தித் துறை) அவர்களின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி, ராஜகுமாரி, விஜயலட்சுமி காலஞ்சென்ற ஜெயக்குமாரி, லலிதா (போராளி ஜணனி-பொறுப்பாளர் செஞ்சோலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லைநாதன், உதயலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வானதி, சுஜித்தா, தயாளன், அகிலா, சுதன், ராகவன், ஆதவன்,கரன், தீபன், தர்ஷா, அர்ஷா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 07.04.2005 அன்று நண்பகல் 12.00 மணிவரை இரணைமடு கனகாம்பிகைக்குள வீதியிலுள்ள செஞ்சோலையில் வைக்கப்பட்டுப் பின்னர் துன்னாலை வடக்கு கரவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனக் கிரியைகள் இன்று 09.04.2005 (சனிக்கிழமை) காலை 10.00மணிக்கு துன்னாலை கரவெட்டியிலுள்ள யான்காடு இந்துமயானத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
செஞ்சோலை.

(5980)




## மூன்றாவது ஒருநாள் போட்டி; பாக்.அணியில் அதிரடி மாற்றம்



இந்தியாவுடனான மூன்றாவது ஒருநாள் போட்டியில் ஆடும் பாகிஸ்தான் அணியில் அதிரடி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஜாம்ஷெட் பூரில் இன்று நடக்கவுள்ளது. இந்தப் போட்டிக்கான இரு அணிகளும் நேற்று தீவிர பயிற்சி மேற்கொண்டன. கொச்சி மற்றும் விசாகப்பட்டினத்தில் நடந்த முதல் இரண்டு போட்டியிலும் இந்தியா வெற்றி பெற்றது. இதனால் அடுத்த போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டிய நெருக்கடியில் பாகிஸ்தான் உள்ளது.

இதன் காரணமாக நடக்கவுள்ள போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் அதிரடியாக சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முதல் இரண்டு போட்டியிலும் சரியாக ஆடாத வேகப்பந்து வீச்சாளர் சமி, சுழல் பந்துவீச்சாளர் அர்ஷத்கான் மற்றும் சகலதுறைவீரர் ஹபீஸ் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப் படவுள்ளனர். இவர்களுக்குப்பதிலாக இப்திகார் அஞ்சும், கனேரியா மற்றும் யூனிஸ்கான் ஆகியோர் இடம் பிடிக்க உள்ளதாக அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் தெரிவித்துள்ளார்.

முதல் இரண்டு போட்டிகளில் தோல்வி அடைந்தாலும் நம்பிக்கை இழக்க வில்லை என்று இன்சமாம் தெரிவித்தார். அடுத்த போட்டியில் இந்தியா வெற்றிபெற்றால் பாகிஸ்தான் அணிக்கு அதிகபடியான சவால் ஏற்படும். ஆனாலும் என்னுடைய நம்பிக்கை காணாமல் போகாது பாகிஸ்தான் வீரர்கள் சாதிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்த நெருக்கடியான நிலையை உணர்ந்து பாகிஸ்தான் வீரர்கள் சாதிக்க வேண்டும் என்று இன்சமாம் கூறினார்.

## இந்திய அணியின் வெற்றி தொடரும்



-சேவாக்

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் 2-0 என்ற முன்னிலை பெற்றுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது எனத் தெரிவித்துள்ளார் இந்திய தொடக்க வீரர் சேவாக். இரண்டு போட்டிகளிலும் நாணயச் சுழற்சியில் வென்றது சாதகமாக அமைந்தது. கொச்சிப் போட்டியில் தொடக்கத்தில் இரண்டு விக்கெட் இழந்ததும் நிதானமாக ஆடத்தொடங்கினோம். ஆனால் விசாகப் பட்டினத்தில் சிறிய மாற்றம் செய்தோம். தொடக்கத்தில் சச்சின் விக்கெட் இழந்த போதிலும் ஓட்ட வேகத்தைக் குறைக்கவில்லை. இதற்கு டோனி நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தார். இதனால் நமது அணி 350 ஓட்டத்திற்கும் அதிகமாக ஓட்டம் குவிக்க முடிந்தது.

ஜாம்ஷெட்பூரிலும் எனது சிறப்பான ஆட்டம் தொடரும். இதேபோல் நமது அணியின் வெற்றிநடை இப்போட்டியிலும் தொடரும் என நம்புகிறேன் என்றார்.

## அகர்கார் ஆடவாய்ப்பு; ஜோண்ரைட் சொல்கிறார்




இந்திய அணியில் அகர்கார் ஆட வாய்ப்புள்ளதாக பயிற்சியாளர் ஜோண்ரைட் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான அடுத்த போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் அஜித் அகர்கார் ஆட வாய்ப்புள்ளதாக பயிற்சியாளர் ஜோண்ரைட் தெரிவித்தார். காயம் காரணமாக தமிழக வீரர் பாலாஜி அவதிப்பட்டு வருகிறார். எனவே, அவருக்குப் பதிலாக சேர்க்கப்பட்டுள்ள அகர்கார் கடைசி வீரர்கள் பட்டியலில் தனது இடத்தை உறுதி செய்ய அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன. இருந்தபோதும் ஆடுகளத்தின் தன்மையைப் பொறுத்தே வீரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று ஜோண்ரைட் தெரிவித்துள்ளார். முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்று இந்தியா முன்னணியில் இருக்கிறது. இன்னும் நான்கு மோதல்கள் நடக்கவுள்ளன.




## நேப்பியர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
## வெற்றி தோல்வியின்றி நிறைவு



நியூசிலாந்தின் நேப்பியர் மைதானத்தில் நடைபெற்ற சிறிலங்கா-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஐந்தாம் நாளான நேற்று சீரற்ற கால நிலையால் கைவிடப்பட்டு சமநிலையில் முடிவடைந்தது.

நேற்று ஐந்தாவது நாள் காலை தனது இரண்டாவது இன்னிங்சை 64 ஓட்டங்களுக்கு இரண்டுவிக்கெட்டுக்கள் இழந்த நிலையில் தொடர்ந்த நியூசிலாந்து அணி மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்படி 301 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிறிலங்கா தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி ஏழு ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை போதிய வெளிச்சமின்மை காரணமாகப் போட்டி இடை நிறுத்தப்பட்டு இரு அணி வீரர்களினதும் நடுவர்களின் தீர்மானத்தின்படி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. சிறிலங்கா சார்பில் லசித் மாலிங்க 80 ஓட்டங்களைக்கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஓட்ட விபரம்: நியூசிலாந்து முதல் இன்னிங்ஸ் 561, இரண்டாவது இன்னிங்ஸ் 238, சிறிலங்கா முதல் இன்னிங்ஸ் 498, இரண்டாவது இன்னிங்ஸ் விக்கெட் இழப்பின்றி ஏழு ஓட்டங்கள்

## மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட்
## இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி



தென்னாபிரிக்காவில் நடைபெறும் மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவுடன் மோத நடப்பு உலக கிண்ண சம்பியனான நியூசிலாந்தை வீழ்த்தி இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் இரண்டு முறை கிண்ணத்தைக் கைப்பற்றிய நியூசிலாந்து அணிக்கும் இந்தியாவுக்குமிடையிலான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 50 ஓவர்களில் ஆறு விக்கெட் இழப்புக்கு 204 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணியின் மைதிலி ராஜ் தனது அரைச்சதத்தை (91) பூர்த்தி செய்ததுடன் ஆட்டமிழக்காதிருந்து வெற்றிக்கு வழி வகுத்தார். பின்னர் 205 என்ற வெற்றி இலக்கு நோக்கி ஆடிய நியூசிலாந்து மகளிர் அணி அமிதா சர்மா, அல்காதிர் ஆகியோரின் பந்துவீச்சில் நிலை தடுமாறியது. சரா மக்கிளஷன் மட்டுமே அதிகபட்சமாக 23 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் 10 ஓவர்களில் 55 ஓட்டங்களைப்பெற வேண்டிய நிலையில் இருந்தபோது ஜூலன் கோசுவாமி எஞ்சிய விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார். இதனால் நியூசிலாந்து அணி 43.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 164 ஓட்டங்களை மட்டுமே பெற்று 40 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. முன்னர் நடைபெற்ற லீக் போட்டியில் நியூசிலாந்து 16 ஓட்டங்களால் இந்தியாவை வென்றமை குறிப்பிடத்தக்கது.

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

## டானியல் விட்டோரி இல்லை

சிறிலங்காவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் நியூசிலாந்து வீரர் டானியல்விட்டோரி பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

அவர் முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வில் இருக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இவர் நேப்பியரில் நடைபெற்ற முதலாவது போட்டியின் போது மணிக்கட்டில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்றே வந்தார் விட்டோரி கடந்த வருடம் 42 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

## இந்தியாவின் பயிற்றுநராக வட்மோர் விருப்பம் தெரிவிப்பு



இந்தியாவின் புதிய கிரிக்கெட் பயிற்றுநராக பதவியேற்க டேவ் வட்மோர் விருப்பம் தெரிவித்துள்ளார். தற்போதைய பயிற்றுநரான ஜோண்ரைட்டின் பதவிக்காலம் முடிவடையவிருப்பதால் அந்த இடத்திற்கு வர அவுஸ்திரேலியாவின் வட்மோர், கிரேக் சப்பல், டொன்மூடி ஆகியோர் கண்வைத்துள்ளனர். ஜோன்ரைட் பாகிஸ்தானுடனான போட்டி களின் பின்னர் பதவி விலகுவார்.

வட்மோரின் பங்களாதேஷ் ஒப்பந்த காலமும் வரும் 30ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகின்றது. இதற்கிடையில் ஜோண்ரைட்டுக்குப் பின்னரேயே (2000) சிரேக் சப்பல் இந்தியாவின் பயிற்றுவிப்பாளராக வரவிருப்பம் தெரிவித்திருந்தார்.

ஜோண்ரைட் இந்திய பயிற்றுவிப்பாளராக இருக்கும் போது கடந்த வருடம் பாகிஸ்தானுடனான போட்டியில் ஒரு நாள், டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது. அத்துடன் 2003ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இறுதிப் போட்டிவரை சென்றது.

## எனது ஆதரவு லண்டனுக்கே குரல் கொடுக்கிறார் மண்டேலா

2012 ஒலிம்பிக் போட்டிகளை நடத்த லண்டனுக்கே தனது ஆதரவு எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளார் நெல்சன் மண்டேலா.

ஒலிம்பிக் போட்டிகளை 2012 ஆம் ஆண்டு நடத்துவதற்கான போட்டியில் லண்டன், பரிஸ்,மாட்ரிட், நியூயோர்க் மற்றும் மெஸ்கோ நகரங்கள் உள்ளன. எந்த நகரில் போட்டி நடக்கும் என்ற விபரத்தை ஜூலை மாதம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது. இந்நிலையில் "மற்ற நகரங்களைக் காட்டிலும் ஒலிம்பிக் நடத்தச் சிறந்த நகரம் லண்டனே!" என்று ஆதரவுக் குரல் எழுப்புகிறார் தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா.

அவர் ஆதரவு குரல் எழுப்புவதற்கும் ஒரு பின்னணி இருக்கிறது 2010 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் நடத்தும் வாய்ப்புக் கேட்கிறது தென்னாபிரிக்கா. இதற்கு பிரிட்டன் முழு ஆதரவு சமீபத்தில் தெரிவித்தது. தென்னாபிரிக்க விளையாட்டுத்துறையுடன் இணைந்து செயற்படவும் சம்மதித்தது. பதிலுக்கு பிரிட்டனின் ஒலிம்பிக் ஆசைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் மண்டேலா.

அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், "ஒலிம்பிக் போட்டியை 2012 ஆண்டு நடத்துவதற்கான தகுதி, அருமை, பெருமை லண்டனைத் தவிர வேறெந்த நகருக்கு இருக்கிறது? லண்டனில் இல்லாத வசதிகளே இல்லை. எனது ஆதரவு லண்டனுக்கே" என்று தெரிவித்துள்ளார். மண்டேலா அனைவராலும் மதிக்கப்படும் தலைவர் என்பதால் அவரது ஆதரவுக்குரலுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கும் என்று நம்புகிறது பிரிட்டன்.

## விளையாட்டுப் போட்டி

அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த திங்கட்கிழமை (04-04-2005) பாடசாலை வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி எல்.எவ். நடேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சதாசிவம் கனகரத்தினம், சிவநாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக வவுனியா வர்த்தக வங்கி முகாமையாளர் சிவஞானம் அவர்களும், கௌரவ விருந்தினராக சுயாதீன ஊடகவியலாளர் கனகரவி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தினை பச்சை இல்லமும், இரண்டாம் இடத்தினை மஞ்சல் இல்லமும், மூன்றாம் இடத்தினை சிவப்பு இல்லமும் பெற்றுக்கொண்டன. (10)

## லீமன் ஓய்வுபெற முடிவு



எதிர்வரும் ஜூலை மாதம் இங்கிலாந்துடனான ஆஸஸ் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணியில் டரன் லீமனின் பெயர் சேர்த்துக் கொள்ளப்படாததையடுத்து அவர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறும் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர் அணியில் இணைத்துக்கொள்ளப்படுவார் என்ற நம்பிக்கையை இழக்காத போதிலும் அவர் அணிக்காக ஆடுவார் என்ற நம்பிக்கையை இழந்துள்ளார்.

லீமன் 27 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 1798 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அதிகபட்சமாக 177 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் 1999ஆம் ஆண்டின் உலகக் கிணணத்துக்காக வெற்றி ஓட்டங்களைப் பெற்றவரும், 2003ஆம் ஆண்டின் உலகக் கிண்ணத்தில் வெற்றி விக்கெட்டைப்பெற்றவரும் லீமன் என்றால் மிகையில்லை. ஒரு நாள் போட்டிகளில் 3078 ஓட்டங்களைப் பெற்ற இவர் கடந்த வருடம் இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியின போது உப அணித் தலைவராக செயலாற்றினார்.

## கரைதுறைப்பற்று பிரதேச கால்பந்துப் போட்டி
## இளம்தென்றல் அணி சம்பியனானது

கரைதுறைப்பற்று பிரதேச உதவி அரச அதிபர் பிரிவுக் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 5-3 என்ற கோல் கணக்கில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

கடந்த வாரம் ஆரம்பமான இந்தப் போட்டியில் 16 கழகங்கள் கலந்து கொண்டு இறுதிப் போட்டிக்கு முள்ளியவளை வித்தியா விளையாட்டுக்கழகமும் , அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகமும் மோதின. இந்த இறுதிப் போட்டி 03.04.2005 அன்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இளம்தென்றல் விளையாட்டு அணி தொடர்ந்து ஐந்தாவது வருடமாக வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொள்வது குறிப்பிடத்தக்கது. (20)

## சிந்தனைக்கு



எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 09-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# நில ஆக்கிரமிப்பு!

சுனாமி அனர்த்தத்தைச் சிங்களப் பேரினவாத சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வடக்கு-கிழக்கில் அதிலும் குறிப்பாக கிழக்கில் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் தீவிர ஈடுபாடு காட்டத்தொடங்கியுள்ளன. இதற்கு அரசியல் வாதிகளும், ஆயுதப்படையினரும் தமது ஒத்துழைப்பை வழங்குவதில் முனைப்புடன் உள்ளனர்.

சுனாமி அனர்த்தம் இரு பெரும் பாதிப்புகளை- நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. ஒரு புறம் பல்லாயிரக்கணக்கான மக்களைத் தமது வாழ்விடங்களை விட்டுத் துரத்தியுள்ளது. மறுபுறம் அவர்கள் மீளக் குடியேற புதிய நிலங்களைத் தேடவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய நெருக்கடி நிலையைச் சிங்களப் பேரினவாத சக்திகள் தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டுள்ளன. அதாவது இச்சந்தர்ப்பத்தை நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கானதொரு அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள அவை முற்பட்டுள்ளன.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் தாயகப்பகுதியில் நில ஆக்கிரமிப்பில் ஈடுபடுவதென்பது புதியதல்ல. இதேவேளை இந்நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையே இலங்கையில் நீண்ட யுத்தத்திற்கும், பெருமளவு இரத்தம் சிந்த வேண்டிவந்தமைக்கும் காரணமாகியது. அதாவது சிங்களக் குடியேற்றங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முனைப்புப்படுத்திய காரணிகளில் முதன்மையானது ஏன் அடிப்படையானது என்று கூடக் கூறலாம்.

ஆனால் யுத்தம் ஓரளவு இந்நில ஆக்கிரமிப்பைக் குறைவடையச் செய்திருந்தது. ஏனெனில் யுத்தபூமியில் சிங்கள மக்கள் குடியேறவிரும்பவில்லை. அரசாங்கமும் அவர்களைக் குடியேற்றச் சிரமத்தை எதிர்நோக்கியது. ஆனால் தற்போதைய சமாதானச் சூழல் மீண்டும் நில ஆக்கிரமிப்புக் குறித்த அபிலாசையைத் தோற்றுவித்துள்ளது.

அதாவது சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுதல் என்ற அடிப்படையில் இவ் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைப் பேரினவாத சக்திகள்முடுக்கிவிட்டுள்ளன. இதில் அரச காணிகள் என்ற ரீதியில் தமிழர் தாயகப்பகுதியில் உள்ள காணிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவது ஒருவகை. தமிழ் முஸ்லிம் மக்களின் சொந்த நிலங்களில், சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கையில் முனைப்புக்காட்டுவது மறுவகை.

இத்தகைய நடவடிக்கைகள் ஏற்கனவே திருமலை, அம்பாறை மாவட்டங்களில் முனைப்புப்படுத்தப்பட்டவையாக உள்ளன. எடுத்துக்காட்டாக திருமலை நகர்ப் பகுதியிலும், புல்மோட்டைப் பகுதியிலும், அம்பாறை. பொத்துவில் பகுதியிலும் இம்முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

ஒருபுறத்தில் புதிய குடியிருப்புக்களை அமைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதேவேளை, வேறொரு புறத்தில் அரச காணிகளில் புத்தரின் சிலைகளை நிறுவுவதன் மூலம் அவை பௌத்தர்களுக்குரியவை என்ற வகையிலும் அடையாளம் இடப்படுகின்றன.

இந்தவகையில் திருமலை நகரில் அரச காணி என்ற ரீதியில் நகரசபைக்குச் சொந்தமான காணியில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்ற முயற்சி தமிழ் மக்களின் எதிர்ப்பாலும், புல்மோட்டையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி முஸ்லிம் மக்களின் எதிர்ப்பாலும் தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்பொழுது பொத்துவிலில் காணி அபகரிப்பு நடவடிக்கைகளில் பேரினவாதசக்திகள் இறங்கியுள்ளன. இதற்கு ஒரு வழிமுறையாக முஸ்லிம் மக்களின் காணிகளில் புத்தர்சிலைகளை வைத்து அவற்றைப் பௌத்தர்களுக்குரிய காணிகள் என அடையாளம் இடமுனைந்துள்ளன.

இது கடந்த காலத்திலும் மேற்கொள்ளப்பட்ட வழிமுறையே, ஆயினும் தற்பொழுது இதற்கு முஸ்லிம் மக்கள் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரச்சினை தீவிரமா கியுள்ளது. ஆயினும் அரசியல் வாதிகளின் குறிப்பாக ஜே.வி.பி யின் பின்னணியுடன் மேற்கொள்ளப்படும் இம்முயற்சிக்கு ஆயுதப்படைத் தரப்பும் பின்புலமாகவுள்ளது.

அதாவது சுனாமியினால் தமிழ்-முஸ்லிம் மக்கள் அடைந்துள்ள இன்னல்களின் போதும் கூட- அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்வதிலேயே சிங்களப் பேரினவாத சக்திகள் முனைப்புக் காட்டுகின்றன. அரசியல்வாதிகளின் பின்புலத்துடன் மேற் கொள்ளப்படும் இம் முயற்சி நிறுத்தப்படாது போனால் தமது இருப்பைக் காப்பதற்காக நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான நடவடிக்கைகளில் சிறுபான்மை இன மக்கள் மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கம் நாட்டைக் காட்டிக்கொடுக்காது

## -சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசாங்கம் நாட்டைக் காட்டிக்கொடுக்காதென சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக அரசு காலத்திற்கு பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுத்துவருகிறதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மொனராகலையில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் ,

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி யும் ஒன்றிணைந்து செயற்படும் என யாரும் எண்ணவில்லை. இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்துள்ளன. நாம் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும். தேர்தல் வாக்குகளை மட்டும் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் செயற்படும் போக்கை அனைவரும் கைவிடவேண்டும். யார் இந்த நாட்டைக் காட்டிக்கொடுத்தாலும் நாம் ஒரு போதும் காட்டிக்கொடுக்கமாட்டோம். நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்காக செய்ய வேண்டிய நடவடிக்கைகளை உரிய வேளையில், உரிய விதத்தில் மேற்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள சனாதிபதி அரசியல் கட்சிகள் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியது அவசியம். சமாதான பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் முட்டாள்களாகவே இருப்பார்கள். சமாதானப் பேச்சுக்கள் குழப்பியடிக்கப்பட்டு குண்டுகள் வெடிக்குமானால் முழுமையாக நாட்டின் அபிவிருத்திப்பணிகள் ஸ்தம்பிக்கும் . நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு நடக்காவிட்டால் அனைத்தும் கெட்டுவிடும் இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றார்கள். நோர்வேயின் தலையீட்டுடனேயே பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். நோர்வேயை ஒதுக்கிவிட்டு விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ள மாட்டார்கள். நாட்டில் குண்டுகள் வெடிக்கத்தொடங்கினால் அபிவிருத்திப்பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடையும். எனவே எந்தக் கட்சி என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் நாட்டு மக்களை மீண்டும் ஒரு யுத்த சூழலுக்குள் தள்ளிவிட எனது அரசாங்கத்திற்கு முடியாது என அவர் தெரிவித்தார். (32)

# சிறிலங்கா கடற்படைத் தளபதி நியமனம் சனாதிபதி – தயாசந்தகிரி முரண்பாடு

(கொழும்பு)

சிறிலங்காவின் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியின் பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைவதால், அடுத்த கடற்படைத் தளபதியாக யாரை நியமிப்பது என்ற விடயத்தில் இழுபறிநிலை தோன்றியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய கடற்படைத் தளபதிக்கு அடுத்த நிலையிலிருக்கும் இரண்டு தளபதிகளில், புதிய கடற்படைத்தளபதியாக யாரை நியமிப்பது என்ற விடயத்தில், சனாதிபதி சந்திரிகாவுக்கும், கடற்படைத் தளபதி தயாசந்தகிரிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய இரண்டாவது நிலைக் கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் மொகான் ஜயவிக்கிரமவை தமக்குப் பின்னர் புதிய தளபதியாக நியமிக்கவேண்டும் என்று தற்போதைய தளபதி தயாசந்தகிரி விருப்பம் கொண்டுள்ளதாகவும், எனினும், மூன்றாவது நிலையிலிருக்கும் தளபதியான வசந்த கருணாகொடவை அடுத்த கடற்படைத் தளபதியாக நியமிக்கவே சனாதிபதி சந்திரிகா எண்ணியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் ஓய்வுபெறவிருக்கும் கடற்படைத் தளபதி தயாசந்தகிரி, அதன்பின்னர் பாதுகாப்பமைச்சின் செயலாளராக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய பாதுகாப்பமைச்சின் செயலாளராக இருக்கும் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன குறுகிய காலத்துக்கே சனாதிபதி சந்திரிகாவினால் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார் என்பதுடன், தொடர்ந்தும் அந்தப் பதவியை வகிக்க அவர் விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆண்டு ஒன்றில் மாணவர்களை சேர்ப்பதில் மோசடி இரு கல்லூரிகளின் அதிபர்கள் இடை நிறுத்தம்!

பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் மாணவர்களைச் சேர்ப்பதில் விதிமுறைகளை மீறி நடந்தமைக்காக கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மற்றும் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி அதிபர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாண்டில் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது, ஒழுக்க விதிமுறைகள் மீறப்பட்டிருப்பது விசாரணைகளின்போது உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே இவ்விரு அதிபர்களையும் இடைநிறுத்தத் தீர்மானித்ததாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்விரு கல்லூரிகளிலும் மாணவர்களை அனுமதிப்பதற்கான குழுவின் அங்கத்தவர்கள் அறியத்தக்கதாகவே இந்தச் சீர்கேடுகள் நடந்ததாகத் தெரிய வருவதோடு, இவ்விரு அதிபர்களுக்கும் எதிராக அமைச்சினால் கடுமையான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது. அத்தோடு, ஆண்டு ஒன்றில் மாணவர்களைச் சேர்க்கும் போது இடம்பெறும் முறைகேடுகள் குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இப் பாடசாலை அதிபர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டதை ஆட்சேபிக்கும் வகையில் நேற்று முன்தினம் பாடசாலைகளின் முன்பாக மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள இரு அதிபர்களையும் மீண்டும் அப்பதவியில் அமர்த்துமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சில பெற்றோர்களும் திட்ட மிட்ட குழுவினரும் இவ் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவது தவறு எனச் சுட்டிக்காட்டியுள்ளது. வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள அதிபர்களுக்குப் பதிலாக புதிதாக இரு அதிபர்கள் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்கோள் அனர்த்த புனரமைப்புப் பணிகளுக்கு ஆ.அ.வங்கி 150 மில்லியன் டொலர் உதவி

## -வடக்கு - கிழக்கிலும் பயன்படுத்துவது பற்றி ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கு உடனடி நிதியுதவியாக 150 மில்லியன் அமெரிக்க டொலரை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தவே இந்த நிதியுதவி வழங்கப்படுமென ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் அலெக்ஸ்சான்டோ பியோ கூறியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக ஏழு மில்லியன் ரூபாவினைக் கடனுதவியாக வழங்குவதற்கும் தாம் தீர்மானித்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மீள்புனரமைப்புப் பணிகளுக்கு இந்த நிதியுதவியினை பயன்படுத்துவது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் கடல் கோள் அனர்த்தத்தால் அழிக்கப்பட்ட வீடுகளை அமைத்துக்கொடுத்தல் வடிகாலமைப்பு சேவைகளைப் புனரமைத்தல் மற்றும் வீதிகளை புனரமைத்தல் போன்றவற்றிற்கு இந்த நிதியுதவி பயன்படுத்தப்படுமெனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் அலெக்ஸ் சாண்டோ பியோ மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட கடல் கோள் அனர்த்தத்தின் பின்னர் முன்னெடுக்கப்பட்ட புனரமைப்புப் பணிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி பெருமளவு உதவி வழங்கியிருப்பதாக சிறிலங்கா புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# கரையோரப் பாதுகாப்பு அணைகளை அமைக்க

# வடமராட்சியில் சிறிலங்கா கடற்படையினர் தடை!

## -தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரையோரங்களில் அமைக்கப்படும் கடலோரப் பாதுகாப்பு அணைகளை இரண்டரை அடி உயரத்திற்கு மேற்படாது அமைக்க வேண்டும் எனச் சிறிலங்கா கடற்படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

மேற்படி பகுதிக் கடற்கரையோரங்களில் சுனாமி போன்ற எதிர்கால அனர்த்தங்களிலிருந்து கரையோரக் கிராமங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்படும் இக்கடலோரப் பாதுகாப்பு அரண்கள் இரண்டரை அடி உயரத்திற்கு மேற்பட்டு அமைக்கப்பட்டால் அது கடற்கரையோரங்களில் நிலை கொண்டுள்ள கடற்படையினரது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக அமையும் எனக் கூறியே கடற்படையினர் இக்கட்டுப்பாட்டினை விதித்துள்ளனர்.

கடற்படையினர் பொதுமக்களது பாதுகாப்பினைக் கவனத்தில் கொள்ளாது தமது பாதுகாப்புக் கெடுபிடி நடவடிக்கைகளை மட்டும் முதன்மைப்படுத்தி அணை உயரத்தை மட்டுப்படுத்த முயல்வது குறித்து யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் சங்கச் சமாச சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமார் விசனம் தெரிவித்துள்ளார். (33)

# உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படலாம்?

## சர்வதேசத்தை திருப்திப்படுத்த அரசு முயற்சி

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னர் சமாதான முயற்சிகளின் ஒரு கட்டமாக பொதுகட்டமைப்பு ஒன்று உருவாக்கப் படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பு உருவாக்குவதில் ஜே.வி.பியின் எதிர்ப்புக் காரணமாக தடங்கல்நிலை ஏற்பட்டுள்ளது எனவே சர்வதேசத்தை ஈர்க்கும் வகையில் சமாதான முயற்சி

களின் அடிப்படையில் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் அரசாங்கத்தின் கவனம் திரும்பி யுள்ளது.

இந்த நிலையில் இது தொடர் பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கருத்தை அறிந்துக்கொள்வதற் காகவே நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் இங்கு வருகை தரவுள்ளார் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயம் பெரும்பாலும் ஐரோப்பிய விஜயத்தை முடித்துக் கொண்டு புதுவருடத்திற்குப் பிற்பாடு அரசியல்துறைப் பொறுப்பா ளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் திரும்பிய பின்னர் இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் கண்டியில் நடைபெற வுள்ளது

இந்தக் கூட்டத்திற்கு முன்னாள் அமெரிக்க சனாதிபதியான பில் கிளின்டனும் விசேட அதிதியாகப் பங்கு கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஆழிப் பேரலையின் பின்னரான நிதி வருகை தொடர்பாகவும் மேலும் தேவைப்படும் நிதி சம்பந்தமாகவும் அமைச்சர் சரத் அமுனுகம அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார். (32)

# இரைப்பை, குடல் நோய்களுக்கு இன்றுமுதல் சிகிச்சை ஆரம்பம்

இரைப்பை, குடல் நோய்களுக்கான சிகிச்சை இன்று முதல் அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருக்கும் இரைப்பை, குடல் நோயியல் நிபுணரான இளங்கோவன் அவர்களினால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த தனியார் மருத்துவமனையில் மேற்கொள்ளப்படவுள்ளது. இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் போன்ற நோய்களுக்கு, குறிப்பாக நெஞ்செரிவு வயிற்றெரிவு, வயிற்றுக்குத்து, இரைப்பை புண், மலத்துடன் இரத்தம் வெளியேறுதல் ஆகிய நோய்களுக்கு நவீன கருவிகள் மூலம் பரிசோதனை மேற்கொண்டு சிகிச்சை வழங்கப்படவுள்ளது. பயன்பெற விரும்புவோர் வெளிநோயாளர் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும், இன்றைய தினம் தொடக்கம் எதிர்வரும் திங்கட் கிழமை வரை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 2.30 மணிவரை சிகிச்சைகள் நடைபெறும். (08)


## தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கான ஆளணி வேண்டுகைகள்

தமிழீழ தேசிய தொலைக்காட்சி சேவையில் பணிபுரிவதற்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

* செய்திவாசிப்பாளர்
* நிகழ்ச்சி அறிவிப்பாளர்
* நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
* நிகழ்ச்சித் தொகுப்பாளர்

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் தகைமைகளுக்கு அமைய கொடுப்பனவு வழுங்கப்படும்

விண்ணப்பங்களை:
"நிதர்சனம்"
திருநகர் வீதி,
கிளிநொச்சி.
என்ற முகவரிக்கு 15.04.2005
இற்கு முன் அனுப்பி வைக்கவும்

பணிப்பாளர், தமிழீழ தேசிய தொலைக்காட்சி

(சி.11661)


### திருத்தம்

நேற்று வெளியான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேற்றில் கிளிநொச்சி மத்தியகல்லூரி மாணவி வே.மயூரியின் பெறுபேறு தவறாக இடம்பெற்று விட்டது. 6ஏ, 3பி, எஸ் என்பதே அவரது சரியான பெறுபேறாகும்.

### திருமலையில்..

உதவியாளர் ஒருவர் உயிரிழந்தார், துணைப்படை வீரர் ஒருவர் காயமடைந்தார். திருகோணமலையின் சம்பூர் வெருகல்-மட்டக்களப்பின் வாகரைப் பிரதேசங்களுக்கான நுழைவாயில் சோதனை நிலையமாக பூநகர் உள்ளது. மகிந்தபுர இராணுவ முகாம் மற்றும் சோதனை நிலையத்திலிருந்து நடுநிலைப்பிரதேச எல்லையில் இந்நிலையம் 500 மீற்றர் தொலைவிலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (25)

### திருமலையில்அமை...

குழுவான கருணா குழு மற்றும் அவர்களுடன் இணைந்த படைத்தரப்பினர் நிற்பதாகத் தகவல் கிடைத்தது. இது குறித்துக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்தோம்.

இம் முறைப்பாடு தொடர்பாக கண்காணிப்புக்குழுவினர் இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டனர்.

ஆனால் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் எமது புகாரை நிராகரித்துவிட்டதாக கண்காணிப்புக் குழுவினர், வியாழக்கிழமை எம்மிடம் கூறினர்.

இந்நிலையிலேயே இன்று (வெள்ளி) அதிகாலை இத்தாக்குதல் நடந்துள்ளது.

திருகோணமலையில் நிலவும் அமைதியைச் சீர்குலைக்க சிறிலங்கா இராணுவம் திட்டுமிட்டு செயற்படுகின்றது. இது திருகோணமலையில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளோம்.

இதே பூநகர் சோதனைச் சாவடியில் மூன்று வாரங்களுக்கு முன்பாக ஒரு தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

தூரத்திலே நின்றுகொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு ஆயுததாரிகள் ஓடிவிட்டார்கள். இதனிடையே இன்று (வெள்ளி) முற்பகல் 11 மணிக்கு திருகோணமலையின் சிங்களக் குடியேற்றப்பகுதியிலுள்ள மேன்காமம் என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றுக்காவலில் ஈடுபட்டபோது சாதாரண உடையில் இருந்த நான்கு பேர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், அதில் ஒருவர் தலையில் காயமடைந்ததாகவும் இராணுவம் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சிறிலங்கா இராணுவத்தின் முறைப்பாடானது, இருதரப்பினரிடையிலும் குழப்பத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டதாகவே நாம் கருதுகிறோம் என்று அவர் கூறினார். (25)

### குற்றங்களுக்காக..

என அவர் கூறியுள்ளார். குற்றச்செயல்களின் தற்போதைய போக்கு என்ற தொனிப்பொருளில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இந்நிலை காரணமாக குற்றவாளிகளையும் விடுதலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குற்றச்செயல்கள் மேற்கொள்ளப்படுவதில் சாட்சியங்கள் கிடைக்காமல் போவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, வருடாந்தம் சுமார் அறுபதாயிரம் குற்றச் செயல்கள் இடம்பெறுவதாகவும், இதில் அனேகமானவை கப்பம் பெறுவது தொடர்பான குற்றச்செயல்களென தெரியவந்துள்ளதாகவும் கூறிய அவர்,

சிறிலங்காவில் பாரிய அளவில் கப்பம் பெறும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் கூறினார். கிடைக்கப்பெற்ற சாட்சியங்களுக்கமைய மேற்கொண்ட விசாரணைகளின் பெறுபேறுகளுக்கு அமைவாக தொலைபேசிகளூடாகவே கப்பம் கோரும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என அவர் கூறினார்.

### சீனப்...

திபதியுடனும், மேலும் அரச முக்கியஸ்தர்களுடனும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் இதன்போது வர்த்தகம் பொருளாதாரம் நோக்கிலான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

### மனிதாபிமான...

பான விபரங்களை அனுப்பிவைக்குமாறு கொழும்புத் தூதரகத்திடம் தமது அரசு கேட்டுள்ளதாகவும் ஸ்காப்பர் கூறினார். இரு தசாப்த கால யுத்தம் மற்றும் ஆழிப்பேரலையால் சிதைவடைந்த தமிழர் தாயக மீள் கட்டமைப்புப் பணிகள் தொடர்பாகவும், பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவும் நெதர்லாந்து அதிகாரிக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் விளக்கினார். தமிழர் தாயகப் பகுதியில் மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சிறிலங்கா அரசு புறக்கணித்து வருவது தொடர்பான தமிழ்மக்களின் கவலையையும் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். அமைச்சர்கள், எதிர்க்கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் அடங்கிய குழுவினரை ஆழிப்பேரலையால் சிதைவடைந்த தமிழர் தாயகப் பகுதிக்கு சிறில்ங்கா அரசு அனுப்பி வைத்து தமிழர் தாயகத்தின் உண்மை நிலையை அறிய வேண்டும் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் அழைப்பு விடுத்தார். இந்தச் சந்திப்பின் போது ஏசியா, ஓசியான் பிராந்தியத் துறையின் மூத்த கொள்கை வகுப்பாளர் டிக்கி மெத்ர்ஸ்ட்-டிபி உடனிருந்தார்.

### பொதுமக்கள்...

இளைஞர் ஒருவரின் வீட்டை இலக்கு வைத்து மேற்படி நபர் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் கைக்குண்டு ஒன்றை வீசியுள்ளார். இக்கைக்குண்டு குறிதவறி வீதியில் விழுந்து வெடித்தபோது வீதியால் சென்ற பொதுமக்கள் கைக்குண்டை வீசிய இளைஞனைப் பிடிக்க முற்பட்டபோது அவர் அவ்விடத்தைவிட்டு ஓடினார். அவரைத் துரத்திச் சென்ற பொதுமக்கள் அவரைக் கட்டிப் பிடித்தபோது அவர் இரண்டாவது கைக்குண்டை வெடிக்கவைக்க முற்பட்டபோது பொதுமக்கள் பாதுகாப்பாக அவரை விட்டுவிட்டு படுத்துவிட்டனர்.

அப்பொழுது அக் கைக்குண்டு வெடித்துள்ளது. அதனால், கைக்குண்டை வெடிக்க வைத்த தேசவிரோதக் குழுவான ஈ.பி.ஆர்.எல்எவ். வரதர் அணி உறுப்பினரான கோவிந்தராஜா சிவகுமார் (வயது30) என்பவர் படுகாயமடைந்தார்.

அவர் காயத்துடன் அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு இன்னுமொரு கைக்குண்டைக் காட்டி யாராவது தன்னை அணுகி னால் அவர் மீது கைக்குண்டு வீசப் படும் என எச்சரித்துவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இதன்போது அப்பகுதிக்கு வெள்ளை வானில் விரைந்து வந்தோரர் இவரைக் காப் பாற்றிக் கொண்டு வந்து வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வயிற்றிலும், காலிலும் படுகாயமடைந்த அவ் இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (10)


## சாவு அறிவித்தல்



### மார்க்கண்டு இலட்சுமி

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இல 233, ஜெயந்தி நகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட மார்க்கண்டு இலட்சுமி 08.04.2005 நேற்றுக் காலமானார். அன்னார் நடேசு மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், கோமலாதேவி(கனடா), காலஞ்சென்ற சரஸ்வதி, நாகேஸ்வரி (இந்தியா), பூவா, சாந்தி, தனலெட்சுமி(சுவிஸ்), காலஞ்சென்ற பரிமளாதேவி, மோகனரஞ்சனி(சுவிஸ்), சசிகலா, ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார். லோகநாதன், சிவம்(கனடா), உருத்திரலிங்கம் தேவராசா, மகேஸ்வரன், சூரியகுமார் (சுவிஸ்), லோகநாதன் (சுவிஸ்), ராஜீ, தவச்செல்வி, ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் அவரது இல்லத்தில் 09.04.2005 இன்று நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக பி.ப 3.00 மணியளவில் ஆனந்தநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
குமார் (மகன்)

(5982)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது